Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම KANNOTTAM

வெளியீடு-35 | 20 மார்கழி 2006 | விலை:- 10.00

மக்களின் பெயரால் நிலை நிறுத்தப்படும் அதிகாரங்களை விட மக்களின் சுதந்திரமான வாழ்வு முக்கியமானது. முதன்மையானது.

# வாகரை மக்களை துரத்தும் துயரம்

உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதில் ஏற்பட்டிருந்த தடங்கல்கள், தாமதங்கள் காரணமாக நீண்ட நாட்களாக மிகுந்த கஷ்டங்களுக்கு உள்ளாகியிருந்த வாகரை பிரதேச மக்கள் தற்போது இடம்பெற்று வரும் மோதல்களால் மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.





திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்ற தாக்குதல்களை தொடர்ந்து இடம்பெயர்ந்து புலிகள் நிலைகொண்டுள்ள வாகரை பிரதேசத்திற்கு சென்று நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்களின் நிலை தொடர்ந்தும் கவலைக்கிடமானதாகவே உள்ளது. இவர்கள் இடம் பெயர்ந்து சென்ற இடத்திலும் நிம்மதியாக இருக்க முடியவில்லை.

*வாகரைப் பிரதேசத்தில் தொடர்ந்தும் இடம் பெற்றுவரும் மோதல்களினால், அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து கவலை வெளியிட்ட கண்காணிப்புக்குழு தமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் இரு தரப்பினருக்கும் வேண்டுகோளை மட்டுமே விடுக்கமுடியும்* என கையை விரித்திருந்தது இந்த மக்களின் நிர்க்கதியான நிலையை வெளிப்படுத்துவதாயிருந்தது.

சிறுவர்களைப் படையில் சேர்ப்பதற்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி ராதிகா குமாரசாமி *அப்பாவிப் பொதுமக்கள் வாழும் பிரதேசங்கள் மீது தாக்குதல் நடாத்துவதை புலிகள் நிறுத்தவேண்டும்* என வேண்டுகோள் விடுத்திருந்தார்.

*பாடசாலைகள், மற்றும் வைத்தியசாலைகள் மீது புலிகள் மேற்கொண்டுவரும் தாக்குதலானது சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மீறும் செயல் என அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.*

*புலிகளின் செல் தாக்குதலினால் சாதரண மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் மேர்கொள்ளும் நடவடிக்கையினை தொடர்ந்து மேற்கொள்ளவேண்டும்* என அவர் இலங்கை அரசாங்கத்தைக் கோரியிருந்தார்.

மோதல்கள் நாளுக்குநாள் தீவிர மடைந்த நிலையில் அங்குள்ள மக்கள பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறிச் செல்ல விரும்பினர். ஆனால் அவர்கள் சுதந்திரமாக தாம் விரும்

தொடர்ச்சி 02ம் பக்கம்

# பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள் மக்கள் பேரணி





மட்டக்களப்பில் வாகரை- மூதூர் வரையிலான பகுதிகளில் செல்வீச்சுககள், உயிரிழப்புக்கள், பட்டினி இவற்றுடன் வாழும் மக்களை பாதுகாப்பான இடதத்துக்கு வந்தடையச செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென கோரி பேரணியொன்று பொதுமக்களால் நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு வாவிக்கரை வீதி-01 வைத்தியசாலை சந்தியில் இருந்து ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்டப் பேரணி மட்டக்களப்பு யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழு (**SLMM**), சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் (**ICRC**), ஐ.நா சிறுவர் பாதுகாப்பு நிதியம் (**UNICEF**), அகதிகளுக்கான ஐ.நா ஸ்தானிகராலயம் (**UNHCR**), மட்டு- திருமலை ஆயர் இல்லம், மட்டக்களப்பு படை தலைமையலுவலகம் ஆகிய அலுவலகங்களுக்கு சென்று இந்த மனிதாபிமான கோரிக்கையை வலியுறுத்தும் மகஜர்களை கையளித்தது.

இந்த பேரணியில் பெரும் திரளான பொதுமக்களுடன் ஈ.பி.ஆர்.எல்.எப்-பத்மநாபா, தமிழீழ மக்கள் விடுதலை கழகம் , ஈழமக்கள் ஜனநாயக கட்சி ஆகிய கட்சிகளின் முக்கியஸ்தர்களும் பங்குபற்றியிருந்தனர். •

# தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கை சம்பள உயர்வல்ல நியாயமான சம்பளம்



## ஆடம்பர வசதிகளுக்கானதல்ல அடிப்படை தேவைகளுக்கானதே

தோட்டத் தொழிலாளர்கள் கடந்த இரண்டு வாரங்களாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். நியாயமான சம்பளம் வழங்கக் கோரி வேலைநிறுத்தம் என்றுமில்லாதவாறு அனைத்து தொழிலாளர்களும் ஒன்று திரண்டு ஒற்றுமையாக தமது அடிப்படைப்பிரச்சினைக்கு தீர்வுகாண போராடி வருகின்றனர்.

பல்வேறு அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்களாகவும், தொழிற்சங்கங்களை சேர்ந்தவர்களாகவும் இருந்த போதும் அவர்கள் தமது அரசியல் கட்சி வேறுபாடுகளை மறந்து, தொழிற்சங்க வேறுபாடுகளை புறந்தள்ளி [illegible] [illegible] போராடிவருகின்றனர்.

தொழிலாளர்கள் தங்கள் நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி அமைதியான வழிமுறைகளை கையாண்டு நடாத்திவரும் போராட்டங்கள் பெருந்தோட்டத் தொழில்துறையை ஸ்தம்பித நிலை அடையச் செய்துள்ளது.

உழைப்பிற்கேற்ற ஊதியத்தை வழங்க கோரி நடைபெறும் தொழிலாளர்களின் போராட்டம் மிகத் தீவிரமடைந்திருக்கிறது. வாழ்க்கை செலவு அதிகரிப்புக்கு ஏற்ப 300 ருபாவை வழங்க வேண்டுமென்று சுமார் நாலரை இலட்சம் தொழிலாளர்கள் தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

எங்களுடைய 300 ருபா சம்பள கோரிக்கையை நிறைவு செய்ய எந்த கட்சி நடவடிக்கை எடுக்கின்றதோ அந்த கட்சிக்கு தான் நாங்கள் எதிர்காலத்தில் வாக்களிப்போம் என்று ஒரு பெண் தோட்டத்தொழிலாளி அனைவரதும் உளளக்கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

பெருந்தோட்டக் கம்பனிகள் தேயிலை, இறப்பர் தோட்டங்களை குத்த

தொடர்ச்சி 04ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்



## மானிதாபிமானப் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு- தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு

தற்போது எழுந்துள்ள மனிதாபிமானப் பிரச்சினைகள் சமூகத்தை சகல வழிகளிலும், சகல துறைகளிலும் பின்தங்கலுக்கும் நெருக்கடிக்கும் இட்டுச் செலலுவதாக அமைந்துள்ளது. கடந்த நான்கு மாதங்களாக அகதிகளாவர்களின் தொகை அதிகரிப்பும் உயிரழிவுகளும் பெருமளவில் நிகழ்ந்துள்ளன.

மக்களின் அன்றாட வாழ்வியல் நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. அல்லது சீர்குலைந்துள்ளன. இந்த பிரச்சினைகள் குறிப்பாக மூதூர், வெருகல் பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து வாகரை பகுதியில் வாழ்பவர்கள் மிகக் கூடுதலான பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள். அவர்கள் சுதந்திரமாக தாம் விரும்பிய இடங்களுக்கு செல்வதற்கான உரிமை தடுக்கப்பட்டுள்ளது. பீரங்கிகளின் நிழலில் வாழ அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டிருப்பது போன்றதொரு நிலை காணப்படுகிறது.

ஏதோவொரு வழியில் பிரம பிரயத்தனமாக உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் அவ்வப்போது வாகரையை சென்றடைந்தாலும் அகதிமுகாமிலேயே மரணிக்க வேண்டிய துர்ப்பாக்கியமும் ஏற்பட்டது.

உண்மையில் இவர்கள் யுத்தமற்ற பாதுகாப்பான பிரதேசங்களில் பாதுகாப்பாக வாழ்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். இதனை வலியுறுத்தியே அண்மையில் மட்டக்களப்பில் பொது மக்கள் பேரணியொன்றை நடத்தினார்கள்.

சர்வதேச கண்காணிப்புக்குழு யுத்தத்தில் சம்பந்தப்படாத மக்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கான இடங்கள் அடையாளப் படுத்தப்பட வேண்டும் என திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகிறது.

தற்போது வாகரையில் தவித்துக் கொண்டிருப்பவர்கள் ஏற்கனவே 2004 சுனாமியில் பாதிக்கபபட்டவர்கள். யுத்தத்தாலும இயற்கை அனர்த்தத்தாலும் வன்முறைகளாலும் பொருளாதார நெருக்கடிகளாலும் மிகவும் களைப்படைந்துபோன பிரிவினராக இவர்களே இருப்பார்கள் என கருதமுடியும்.

இதேபோன்று யாழ்ப்பாணமும் தரைவழி போக்குவரத்து இல்லாத சூழ்நிலையிலும் கடல்வழியாக ஒரு சீராக அத்தியாவசியப் பொருட்களை கொண்டு சேர்ப்பிக்க முடியாததாலும் பெரும் கஷ்டத்தை கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக அனுபவித்து வருகிறார்கள். சுமார் ஐந்தரை லட்சம் மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை கொண்டு சென்று சேர்ப்பிப்பதில் புலிகள் பாதுகாப்பு அச்சுறுத்தலை விடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கடல்வழியாக உணவு அத்தியாவசியப் பொருட்கள் செல்வதற்கு தாம் பாதுகாப்பு உத்தரவாதம் தரமுடியாதென புலிகள் திரும்பத் திரும்ப கூறி வருகிறார்கள். இத்தகைய சூழ்நிலையில் உணவு, மற்றும் அத்தியாவசியப் பொருட்களை அனுப்பும் நடவடிக்கைகளோ அன்றி அத்தியாவசியப் போக்குவரத்துக்களோ நிகழாது இருந்திருக்குமானால் பட்டினி உயிரிழப்பு உட்பட பல அநியாய உயிரிழப்புக்கள் நிகழ்ந்திருக்கும்.

எனினும் தொழிலில்லாமல் அல்லது மட்டுப்படுத்தப்பட்டளவு தொழிலுடன் அல்லது கல்வி கற்பதற்கான வளங்கள் சூழ்நிலைகள் குறைந்துள்ள சூழல் நீடிக்க அனுமதிக்க முடியாது. இப்பிரதேசங்களில் மனிதாபிமான நெருக்கடிகளுக்கு விரைவாக தீர்வு காணப்பட வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான அனைத்து கட்சிகளின் கூட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது. இம்மாத நடுப்பகுதியில் தீர்வு முன்வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய இலங்கைக்குள் இணைந்த வடக்கு கிழக்கில் தமிழ் மக்களும் முஸ்லீம், சிங்கள மக்களும் தத்தமது தனித்துவங்களுடன் ஐக்கியமாக வாழ்வதற்கான ஏற்பாடுகள் தீர்வில் உள்ளடக்கப்பட வேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் சிங்கள, தமிழ், மலையக முஸ்லீம் பறங்கி, மலாய் இன மக்கள் ஒன்றாக வாழ முடியுமானால் இணைந்த வடக்கு கிழக்கிலும் வாழ முடியும். இதில் எந்த குழப்பமும் தேவையில்லை.

கால்நூற்றாண்டு காலமாக இந்நாட்டில் தமிழ் மக்களும் ஏனைய சிறுபான்மை தேசிய சமூகங்களும் அனுபவித்து வரும் துன்பங்களுக்கு நிரந்தர தீர்வை இனிமேலும் ஒத்திபோட முடியாது. தீர்வு இந்த நாட்டில் இனப்பிரச்சினையால் வெகுவாக பாதிக்கப்பட்ட சமூகங்களின் அபிலாஷைகளையும் இந்த நாட்டின் அனைத்து சமூகங்களின் ஐக்கியம் ஒருமைப்பாட்டையும் அடிப்படையாக கொண்டதாக அமைய வேண்டும்.

மனிதாபிமான பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு காண்பதும் நீண்டகால தேசிய இன சமூகங்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண்பதுவுமே இப்போதுள்ள முதலும் முக்கியமுமான பணியாகும்.

சகல விதமான வன்முறைகள் மனிதஉரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு இது பாரியவொரு அடிவைப்பாக அமையலாம்.

## வாகரை மக்களை துரத்தும்.............

01ம் பக்கத் தொடர்ச்சி

பிய இடங்களுக்குச் செல்வதற்கு புலிகள் அனுமதிக்கவில்லை.

*அப்பாவிப் பொதுமக்களைக் கேடயங்களாகப் பயன்படுத்தி வாகரைப் பிரதேசத்தில், புலிகள் தாக்குதல் நடாத்துவதாக குற்றம் சாட்டிய பாதுகாப்பு விவகாரப் பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல இது குறித்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிகளவான கவனத்தினைச் செலுத்த வேண்டும் என கேட்டிருந்தார்.*

*தமது கட்டுப்பாட்டுப்பகுதிகளில் உள்ள மக்கள் வெளியேறிச் செல்வதற்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது* என்பதை புலிகளின் பேச்சாளர் இளந்திரையன் ஒப்புக்கொண்டுள்ளார். பி.பி.சி தமிழோசைக்கு கருத்து தெரிவிக்கும் போது இளந்திரையன் இதனை குறிப்பிட்டார்.

புலிகள் கட்டுப்பாடு என்று பெயர் வைத்துக்கொண்டாலும் தமது கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து பொது மக்கள் வெளியேறுவதை தடுப்பதற்கு அவர்கள் நீண்ட காலமாக பல்வேறு உத்திகளை கையாண்டுவருவது தமிழ மக்கள் அறியாததல்ல. புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளிலிருந்து வெளியேறுவதற்கு பாஸ் வழங்கும் முறையையும் ஆட்களை பிணைவைக்கும் முறையையும் அவர்கள் அறிமுகப்படுத்தியிருந்தது இரகசியமானதல்ல. ஆனால், புலிகள் இவ்வாறு மக்களின் நடமாட்ட சுதந்திரத்தை பறிக்கும் விடயம் இப்போது தான் சர்வதேச சமூகத்தின் கண்களுக்குப் புலனாகியுள்ளது.

*வாகரையில் இருந்து இடம் பெயர்ந்துள்ள ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கை ஆபத்தான கட்டத்தில் இருப்பதாகத் தெரிவித்த யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தோமினர் ஓமல்சன், வாகரைப் பிரதேச மக்களின் நடமாட்டத்தினைக் கட்டுப்படுத்தி அவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய புலிகள் தவறிவிட்டனர் எனவும், அவர்களை பாதுகாப்பான இடங்களில் தங்கவைப்பது புலிகளின் கடமையெனவும் தெரிவித்தார்.*

*மோதல்களை நிறுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுத்த ஐக்கிய நாடுகள் சபை, பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் செல்வதற்கு புலிகள் அனுமதிக்கவேண்டும* என வலியுறுத்தியிருந்தது.

மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு இடமளிக்கப்படாததால் அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு தப்பிச் செல்ல ஆபத்தான வழிகளை நாடினர். காடுகளுக்கு ஊடாகவும், கடல் வழியாகவும் பயணத்தை மேற்கொண்டனர். இதனால் இடைநடுவில் உயிரிழக்க வேண்டிய பரிதாப நிலைக்கு உள்ளாகினர்.

வாகரை பிரதேசத்தில் உள்ள அகதி முகாம்களிலிருந்து 15.12.2006 அன்று அதிகாலை கடல்வழியாக இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியை நோக்கி வரும் போது 3 படகுகள் கவிழ்ந்ததில் 10க்கும் மேற்பட்டோர் பலியாகினர். வாழைச்சேனை முகத்துவராப் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில பலியான சுரேஷ் ஆனந்த ஜோதி (வயது 24), சுரேஷ் சேரன் (6மாதம்), ஆனந்தராஜா மீனா (வயது 10) ஆகியோரின் இறுதிக் கிரியைகள் மட்டக்களப்பு சிங்கள மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

சம்பூர் சூரக்குடா, கட்டைப்பறிச்சான், சேனையூர், பள்ளிக்குடியிருப்பு, கடற்கரைசேனை, கூனித்தீவு, பாட்டாளிபுரம், வீரமாநகர், நல்லூர், முட்டுச்சேனை, வெருகல், கதிரவெளி, வாகரை, பால்சேனை, கணேஷபுரம், தங்கபுரம், கிளிவெட்டி, மூதூர், போன்ற கிராமங்களைச் சேர்ந்த சுமார் 2000 பொது மக்கள் கதிரவெளி வாகரை, அகதிமுகாம்களில் இருந்து கடல்வழியாகவும், காடுகளினூடாகவும் கடந்த 14ம் 15ம் திகதிகளில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வந்து சேர்ந்தனர். இவர்கள் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் துணையுடன் கிரான், சவுக்கடி, கள்ளியங்காடு பகுதிகளில் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப் பட்டுள்ளனர்.

தோழர் இரா. துரைரட்ணம் தலைமையில் ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா கட்சியின் தோழர்கள் இந்த மக்களை சந்தித்து அவர்களது குறைகளை கேட்டபோது "எம்முடன் வந்த பல நூற்றுக்கணக்கானவர்கள் காடுகளிலும், பதுங்கு குழிகளிலும், பாதை ஓரங்களிலும் இடைநடுவில் பரிதவிக்கின்றனர். உண்ண உணவின்றி கஷ்டப்படுகின்றனர். பாதுகாப்பான இடங்களுக்கு வந்து சேர முடியாத நிலையில உள்ளனர். அவர்களை அழைத்து வர உதவுங்கள்" என்று அந்த மக்கள் கோரியுள்ளனர்.

வாகரைப் பரதேசத்திலிருந்து கடந்த ஒரு மாத காலத்தினுள் 13,220 பேர் அரசாங்க கட்டுப்பாட்டு பகுதிக்குள வந்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சி.புண்ணியமூர்த்தி 17.12.2006 அன்று தெரிவித்திருந்தார். இம்மாதம் 14, 15, 16 ஆம் திகதிகளில மாத்திரம் 3446 பேர் வந்தடைந்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

வாகரையலிருந்து புறப்பட்ட மக்கள் ஓமடியாமடு ஊடாக வெலிக்கந்தையை வந்தடைந்து பின்னர் I.O.M அரச சார்பற்ற அமைப்பின் உதவியுடன் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அழைத்துவரப்பட்டதாக தெரிவிக்கப் படுகின்றது.

வாகரையிலிருந்த இடம்பெயர்ந்து வந்துள்ள மக்கள் செங்கலடி, வாழைச்சேனை, கிரான், மட்டக்களப்பு, ஆரயம்பதி, களுவாஞ்சிக்குடி ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்த இடத்திலாவது அவர்களுக்கு நிம்மதியும் அடிப்படைவசதிகளும் கிட்ட வேண்டும்.

## தோழர் இரட்ணாவுக்கு அஞ்சலி



1938 ஆம் ஆண்டு பிறந்த தோழர் இரட்ணா (இளையதம்பி இரட்ணசபாபதி) தமிழ் மக்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கும் நோக்கில் எழுபதுகளின் முற்பகுதியில ஈரோஸ் இயக்கத்திற்கு அடித்தளமிட்டவர். அந்த அமைப்பின் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும் முக்கிய பங்காற்றியவர்.

ஈழத்தமிழர் சமூகத்தில் ஆயுதப் போராட்டத்திற்கு அடித்தளமிட அதே வேளை ஆயுதந் தாங்கிய போராட்டம் ஒரு முற்போக்கான பாத்திரத்தை வகிக்க வேண்டுமென உழைத்த முன்னோடிகளில் இளைய தம்பி இரத்தினசபாபதி அவர்கள முதன்மையானவர். யாழ்மாவட்டம் இணுவிலை பிறப்பிடமாகக கொண்ட அவர் தனது 68 வது வயதில 12.12.2006 அன்று லண்டனில் இயற்கை மரண மெய்தியுள்ளார்.

தமிழர்களின் போராட்டம் தேசிய ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டமாக மாத்திரமல்லாமல் சோசலிசத்தை நோக்கியதாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தி நின்றார்.

போராட்டத்தின் தலைமை சக்தியாக அடக்கி ஒடுக்கப்பட்ட தொழிலாளர் வர்க்கம் தலைமையேற்க வேண்டும் என்பதும் அவரது உறுதியான கருத்தாக இருந்தது.

சர்வதேச விடுதலை இயக்கங்களுடன் அவா ஏற்படுத்திக் கொண்ட தொடர்பை பயன்படுத்தி ஈழவிடுதலைப் போராட்ட இயக்கங்களின் உறுப்பினர்கள் ஆயுதப்பயிற்சி பெற வழியேற்படுத்தியவர். ஈ.பி.ஆர்.எல்.எவ் செயலாளர் நாயகம் அமரர் தோழர் பத்மநாபா, ஈரோஸ் இயக்கத்தின் தலைவர் சங்கர் ராஜி போன்ற பின்நாளைய தலைவர்கள் இவ்வாறு பயிற்சி பெற்றவர்களில் அடங்குவர். அப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவராயிருந்த உமாமகேஸ்வரனும் வேறு சிலரும் 1977 ஆம் ஆண்டளவில் புலிகள் இயக்கத்தின் சார்பில் பயிற்சி பெற காரணமாயிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மாக்சிச லெனினிச தத்துவத்தை முன்நிறுததியும், மக்களை அணிதிரட்டி முன்னெடுத்துச் செல்லவேண்டிய

தொடர்ச்சி 03ம் பக்கம்


## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.**

**அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-**

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

E.P.I.C., Box No: 0362
71603 Ludwigsburg,
Germany.

B.M. Box No: 1738
London - Wcix - 3nn,
U.k.

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 222 2022,

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 22 25179

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 22 27118

சென்செபஸ்த்தியார் வீதி
மன்னார்.
☎ 023 22 32822


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பிறக்கப்போகும் ஒவ்வொரு குழந்தையும் யுத்தத்தையும், பயங்கரவாதத்தையும், வெறுப்பையும் தவிர வேறொன்றையும் அறிந்திருக்க மாட்டார்கள்

**பாரிஸ் நகரில் உள்ள யுனெஸ்கோ மண்டபத்தில் 16-11-2006 அன்று சகிப்புத்தன்மையையும், அகிம்சையையும் மேம்படுத்துவதற்கான யுனெஸ்கோவின் மதன்ஜித் சிங் விருதை பெற்றுக் கொண்டு திரு வீ. ஆனந்தசங்கரி அவர்கள் ஆற்றிய ஒப்புரை**



சர்வதேச ஜூரர் சபையின் தலைவர் திரு அன்ரஸ் பாஸ்ரானா அறங்கோ அவர்களே, கௌரவ ஸ்ரீ மதன்ஜித் சிங் ஜீ அவர்களே, மேதகு பிரமுகர்களே, சீமாட்டிகளே, கனவான்களே!

ஆயுபோவன், உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம். இன்று இந்த நிகழ்ச்சியில் சமூகமளிக்க இயலாது போன யுனெஸ்கோ பணிப்பாளர் நாயம் திரு. கொய்சிரோ மட்சூரா அவர்களுக்கு எனது நல்வாழ்த்துக்கள்.

சகிப்புத்தன்மைக்கும் அகிம்சைக்கும் எனக்களிக்கப்பட்ட இந்த யுனெஸ்கோ மதன்ஜித் சிங் விருதானது தனிமனித சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு நான் மேற்கொள்ளும் போராட்டத்திற்கும் அகிம்சையை பேணுவதற்கு எனக்குள்ள ஆர்வத்திற்கும் கிடைத்த ஒரு கௌரவமாக கருதுகின்றேன்.

மகாத்மா காந்தியிலிருந்து மார்ட்டின லூதர் கிங் நெல்சன் மண்டேலா வரை தமது இதயங்களில் அமைதியை நோக்காக கொண்டே தமது மக்களின் உரிமைகளுக்காக போராடினார்கள். அவர்கள் அடைந்த வெற்றியானது ஜனநாயக ரீதியாகவும், சாத்வீக வழிகளிலும் இலங்கையில் வாழுகின்ற தமிழ் மக்களின் உரிமைகளுக்காக போராடும் எனது சிந்தனைகளுக்கும் செயல்களுக்கும் பெரும் ஊக்குவிப்பாக இருந்தது என்று கூறலாம்.

சகிப்புத்தன்மையின்மையும், பிரிவினைவாதமுமே ஒருவரிலிருந்து இன்னொருவரைப் பிரித்து இனவாதக் கோடபாடுகளுக்கு வழிவகுத்தன என்பதை நான் இங்கு முதற்கண் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். ஒருவர் வேற்று மொழியை பேசுபவராகவும், வேற்று மதத்தை பின்பற்றுபவராகவும், வேறொரு நிறம் கொண்டவராகவும் இருக்கலாம். எனினும் அத்தகையோர் பற்றிய புரிந்துணர்வு இன்மையே உலகளாவிய ரீதியில் முரண்பாட்டுக்கான மூல காரணம் என இங்கு குறிப்பிடலாம்.

மனிதர்களுக்கிடையேயோ, சகோதரர்களுக்கிடையேயோ தோன்றும் பிரச்சினைகள் வன்முறைகளுக்கு இட்டுச செல்லப்படுவதை நான் கண்டுள்ளேன். ஒரு குழந்தையை போட்டி மனப்பான்மையுடனேயே வளர்க்கின்றோம். வாழ்க்கை எத்தகைய அழகியதொன்றெனக் காட்டுவதை விடுத்து பொருளும், செல்வமும், அதிகாரமும் முக்கியமானதென நாம் அவர்களுக்குப் புகட்டுகின்றோம். வாழ்க்கை என்பது சகல பொருட்களையும் கொண்ட ஒரு பெரும சந்தையைப் போன்றது. அவை யாவற்றையும் பணமிருந்தால் எம்மால் வாங்கிக்கொள்ள முடியும்.

எனவே, அதிக மகிழ்வினை பெறுவதற்காக முடிந்தளவு பொருட்களை வாங்குவதற்கு தேவையான பணத்தை அடைவதே வாழ்வின் நோக்கமாக இருக்கிறது. அந்த முறையில் சில விதிகளை மீற நேரிட்டாலோ, சில நண்பர்களை புண்படுத்தினாலோ அது பெரிதாக கருதபடுவதில்லை. அவை எம்மிலோ நாம் அவற்றிலோ எந்த தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை. எனவே, "அனைவரின் தேவைக்கும் உலகில் இடமுண்டு. ஆனால் அனைவரின பேராசைக்கும் உலகில் இடமில்லை" என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதிகாரப் போட்டியிலும் இதே உதாரணம் பொருந்தும். வாழ்க்கை என்பது பகிர்ந்து கொள்ளப்படுவதேயன்றி மேலதிகமாக எடுத்துக் கொள்வதற்கல்ல. ஆளுவதை விடுத்து சேவை புரிவதற்கும், வெறுப்பை விடுத்து அன்பு செலுத்துவதற்கும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் நண்பர்களாக. ஒரு குடும்பத்தவர்களாக, ஒரு நாட்டின் பிரஜைகளாக, இந்த பூமித்தாய் பெற்ற புதல்வர்களாக ஒருமித்து வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

சுயநலமிக்க செயற்பாடுகளும் ஆட்சி புரிவோரின் குறுகிய தன்னிச்சையான கொள்கைகளும் சமாதானத்தையும், சகிப்புத்தன்மையையும், அகிம்சையையும் மேம்படுத்துவதற்கு தடையாக உள்ளன. எனினும் கல்வியானது சமாதானம் மற்றும் சுதந்திரத்தை கட்டியெழுப்புவதற்கான அத்திவாரங்களான மனித உரிமையையும் மாண்புகளையும் மதிப்பதற்கான ஒரு பாரிய சந்தர்ப்பத்தை எமக்குத் தருகிறது.

ஒரு முன்னாள் ஆசிரியன் என்ற வகையில் சமாதானத்திற்கான கல்வி என்பது வாழ்வுக்கான கல்வி என நான் நம்புகின்றேன். எனவே கல்விக்கான ஒரு முதன்மை நிறுவனம் என்ற வகையில் ஜனநாயகம், நல்லாட்சி, சகிப்புத்தன்மை, மனித உரிமைகள், கருத்துச் சுதந்திரம், அனைவருக்கும் நீதி ஆகியவற்றை முன்னெடுத்துச் சென்று எமது சந்ததியினர் இந்த அதியுயர் கோட்பாடுகளைப் பின்பற்றுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குமாறு நான் யுனெஸ்கோ நிறுவனத்தை வேணடிக்கொள்கின்றேன்.

ஜூரர் சபையின் மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு பிரதி பணிப்பாளர் நாயகம் அவர்களே, மாண்புமிகு ஸ்ரீ மதன்ஜித் சிங் அவர்களே, மேதகு பிரமுகர்களே!

இன்று உலகெங்கணும் நிகழும் வன்முறைகள் பற்றியும் குறிப்பாக எனது சொந்த நாடான இலங்கையில் நிகழும் வன்முறைகள் பற்றியும் சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன்.

பொதுவாக எல்லா வன்முறைகளும 'மனித உரிமைகளை மீறல், அநீதி. சகிப்புத்தன்மை அற்ற நிலை, பாரபட்சம் காட்டப்படுதல்" ஆகியவற்றையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஒருவரின் உரிமைக்காக போராடுவதில எவ்வளவு தான் நியாயங்கள் இருப்பினும் வன்முறையென்பது மேலும் வன்முறைக்கே வித்திடும் என்பது அனைவரும் ஏற்றுக்கொண்ட ஓர் உண்மையாகும். ஒரு முறை வன்முறை ஆரம்பிக்கப்பட்டால் அது வெறுப்பு, அவநம்பிக்கை என்பனவற்றை உருவாக்கி அது நீண்டதோர் போராட்டமாக மாறக் கூடியது. அதுமட்டுமன்றி வன்முறையாளர்களை மிகவும் பலம் பெற்றவர்களாகவும் மாற்றி விடுவதோடு அவர்கள வழமைக்கு திரும்புவதென்பது இயலாததொன்றாகிவிடும். அவர்கள் இங்கள் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக ஆயுதக்கடத்தல், போதைப் பொருட்கள் நிதி சேகரிப்பு ஆகிய முயற்சிகளில் ஈடுபடுவர். இது ஒரு பெரும் தொழிலாகி இதனை நிறுத்துவதென்பது இயலாத ஒன்றாகிவிடும் இதுவே இன்று இலங்கையில் நடக்கிறது.

ஒருபுறம் எம்போன்ற சில நடுநிலையாளர்கள் பொது மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக ஜனநாயக ரீதியில் போராடிக்கொண்டிருக்கும் அதேநேரத்தில் இலங்கையிலுள்ள தமிழ் சமுதாயத்தின் பெரும்பாலாரின் கருத்தைப் பிரதிபலிக்காத தமிழீழ விடுதலைப் புலிகள் என்று தம்மை கூறிக்கொள்ளும் ஆயுதக் குழுவொன்று தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமிழ் மக்களை பிணைக் கைதிகளாக வைத்திருப்பதோடு மட்டுமன்றி தமது பயங்கரவாதத்தால் முழு நாட்டையுமே திகிலுக்கு உள்ளாக்கியுள்ளனர்.

இவர்கள் தமிழ் மக்களை விடுவிப்பதாக கூறிக்கொண்டு பெற்றோர்கள் ஏதும் செய்ய இயலாது இருக்கும் நிலையில் அவர் தம் பிள்ளைகளை வலுக்கட்டாயமாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுத்துகின்றனர். இந்த அப்பாவிச் சிறுவர்கள் தீவிரவாதக் கோட்பாட்டாளர்களால் மூளைச்சலவை செய்யப்பட்டு தற்கொலை குண்டுதாரிகளாகவும், பீரங்கிக்கு இரையாகவும் மாறுகின்றனர். அதேநேரத்தில் அவர்களின் குழந்தைகள் இவ்வாறு வலுக்கட்டாயமாக தற்கொலை குண்டுதாரிகளாக மாற்றப்படாமல் வெளிநாடுகளில் பாதுகாப்பான வாழ்க்கை வாழ்கின்றனர்.

அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா, ஐரோப்பிய யூனியன், இந்தியா ஆகிய நாடுகளில் பயங்கரவாத இயக்கம் என தடைசெய்யப்பட்ட இந்த ஆயுதக் குழுவானது பிராந்திய தேசிய மட்டங்களில் ஜனநாயக ரீதியில தேர்ந்தெடுக்கப்பட்ட பல தலைவர்களை குறிப்பாக முன்னாள் இந்தியப் பிரதமர், முன்னாள் இலங்கை ஜனாதிபதி, தமிழரான முன்னாள் இலங்கை வெளியுறவு அமைச்சர், பல நடுநிலையான சிங்கள, தமிழ் அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், பத்திரிகையாளர்கள் என்போரை கொலை செய்துள்ளது. இந்த பட்டியல் நீண்டுகொண்டே போகின்றது.

இது தவிர எழுபதாயிரத்துக்கும் அதிகமான போராளிகளும், அப்பாவி பொது மக்களும் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்திற்கு இரையாகி உள்ளனர். விடுதலைப் புலிகளின் இன சுத்திகரிப்பின் காரணமாக முஸ்லீம் மக்கள் வடக்கிலிருந்து அநீதியான முறையில் விரட்டியடிக்கப்பட்டனர். சுனாமியின் பினனரும் தமிழ் மக்களை விடுவிப்பதாகக் கூறிக்கொள்ளும் இவர்கள் சுனாமி நிவாரணத்தை பகிர்ந்தளிப்பதற்காக ஒரு இணைந்த அமைப்பு வேண்டுமென கூறி அதன் நிமித்தம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்க வேண்டிய உதவிகளை தாமே அபகரித்து தமது கட்டுப்பாட்டில் வாழும் மக்களுக்கு உரிய முறையில் நிவாரணம் சென்றடையாமலும் செய்தனர்.

ஏ-9 என அழைக்கப்படும் வட பகுதியை இணைக்கும் வீதியின் ஒரு பகுதியாலேயே யாழ் குடாநாட்டுக்கு பொருட்கள் எடுத்துச் செல்லப்படும். அத்தனைப் பொருட்களுக்கும் கடுமையான வரி விதக்கப்பட்டு வந்தமையால உணவுப்பொருள், விவசாய சாதனங்கள் உட்பட சகல பொருட்களும் கூடுதலான விலைக்கே விற்கப்பட்டு வந்தன. இவ்வாறு சேர்க்கப்படும் பணம் புலிகள் தம்மை ஸ்திரப்படுத்திக்கொள்ள வேண்டிய ஆயுதங்களை பெறவே உபயோகிக்கப்பட்டது.

2001ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் மிக அதிக விருப்புரிமை வாக்குகள் பெற்று மாவட்டத்தின் முதல் பிரதிநிதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட என்னை எனது சொந்த தேர்தல் தொகுதிக்கும் செல்ல முடியாது தடுத்து எனது உயிருக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தினர். அதன் பின்னர் விடுதலைப் புலிகள் வட பகுதியில் வாழும் மக்களுக்கு வாக்குரிமையை மறுத்ததோடன்றி 2005ல் நவம்பர் மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடபகுதியைச் சேர்ந்த அனைத்து மக்களையும் வாக்களிக்கவிடாது செய்தனர். எனினும் நான் என உள்ளம் ஏற்றுக் கொண்ட கருத்துக்களின்படி வாழ்வதிலிருந்து அச்சம் என்னை தடுக்கும் வயதினை தாண்டிவிட்டேன் எனக் கொள்ளலாம்.

இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்கும் ஏன் இந்த நாட்டிற்குமே இந்த அவலங்களை கொண்டுவந்த விடுதலைப் புலிகளின் அடக்கு முறைகளிலிருந்து இலங்கையிலுள்ள தமிழ் மக்களை மீட்டெடுக்க உதவும்படி சர்வதேச சமூகத்திடம் நான் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். ஆகவே இந்த நாட்டு வருங்கால சந்ததியினருக்காக அமைதி, சமாதானம், அபிவிருத்தி ஆகிய விடயங்களையிட்டு நாம் மிகவும் தீவிரமாகவும் தாமதமின்றியும் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். இதனை அடைவதற்கு இங்குள்ள யதார்த்த நிலைகளை பூரணமாக அறிந்திருக்க முடியாத சர்வதேச சமூகத்திடமும் வெளிநாட்டிலுள்ள தமிழ் மக்களிடமும் நான் கேட்பது என்னவென்றால் வன்முறை வழிகளில் இந்த நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களின அபிலாசைகளை பூர்த்தி செய்ய விளையும் பயங்கரவாத அமைப்பிற்கு நிதி மற்றும் உதவிகளை செய்ய வேண்டாம் என்பதேயாகும்.

வட கிழக்கில் கடந்த 25 ஆண்டுகளாக மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் எனது கூற்றுக்கு சான்றாக அமையும். அவர்கள் அற்ப காரணங்களுக்காக பேச்சுவார்த்தைகளையும் சமரசங்களையும் ஒதுக்கித் தள்ள விரும்புவார்கள். ஏனெனில் பேச்சுவார்த்தையின் பின் எடுக்கப்படும் இறுதித் தீர்வானது அவர்கள் இதுவரை காலமும் அடக்கு முறையின் பலனாக அனுபவித்து வந்த அதிகாரங்களையும் போதைவஸ்து பயங்கரவாதம் மூலம் அவர்கள் பெற்று வந்த அதீதமான இலாபங்களையும் இல்லாது ஒழித்துவிடும்.

நிதி, அதிகாரம், கட்டுப்பாடு என அவர்கள் இதுவரை அனுபவித்து வந்த செல்வாக்குகள் அனைத்தையும ஒரு சமரச தீர்வு இல்லாது ஒழித்து விடும். எனவேதான் வெளிநாட்டில் வாழும் தமிழ் மக்களையும், சர்வதேச சமூகத்தையும் இவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டாம் என கேட்டுக்கொள்கின்றேன்.

அதேநேரத்தில் இலங்கை அரசானது சிறுபானமை மக்கள் ஏற்கக்கூடிய ஒரு சமஷ்டி அரசை முன்வைத்து அதிகாரப் பரவலாக்கலுக்கு வழிகோலும் தீர்மானத்ததை விரைவில் முன்வைக்க வேணடும் இதுவே இலங்கை மக்கள் அனைவருக்கும் நிலையான தீர்வை வழங்கக்கூடிய ஒன்றாகும்.

மகாத்மா காந்தி அவர்களின் கூற்றுப்படி நேரம் ஒரு நெருக்கமுள்ள நண்பன். ஆனால் அதேநேரத்தில் நேரமும் ஒரு இரக்கமற்ற எதிரியாகவும் மாறக்கூடும். நாங்கள் தக்க நேரத்தில் கருமமாற்றாவிடில் இலங்கையில் பிறக்கப்போகும் ஒவ்வொரு குழந்தையும் யுத்தத்தையும், பயங்கரவாதத்தையும், வெறுப்பையும் தவிர வேறொன்றையும் அறிந்திருக்க மாட்டார்கள் அடுத்த சந்ததியினர் இவ்வாறு அழியும் நிலையில் உள்ளனர். எனது இந்த கருத்திற்காக என்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். ஏனெனில் நானும் ஒரு மனிதனே.

சகிப்புத்தன்மையையும் சாத்வீகத்தையும் மேம்படுத்துவதற்காக எனக்கு கிடைத்த இந்த அங்கீகாரத்தினையும் விருதினையும் மகிழ்வுடனும் அதேநேரத்தில் மிக மன அடக்கத்துடனும் ஏற்றுக் கொள்கின்றேன். இலங்கையில் வாழுகின்ற தமிழ் மக்கள் ஒரு கௌரவம் மிக்க இனமாக சமாதானமான அகிம்சை வழிகளை பின்பற்றி தங்கள உரிமைகளை வென்றெடுக்கும் வரை எமது போராட்டத்தை நானோ எனது ஆதரவாளர்களோ தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியோ கைவிடாது என நான் உறுதிபடக் கூறுகின்றேன். இவ்வாறு செய்தால் மாத்திரமே இந் நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லீம், பறங்கியர் ஆகிய பல்வேறு இன சமுதாயத்தை சேர்ந்த பிள்ளைகளும், பேரப்பிளளைகளும் "மீண்டும் ஒரு முறை இந்த நிலை வேண்டாம்", "நாங்கள் அனைவரும் ஒன்றே" எனக் கூறுவர்.

## தோழர் இரட்ணாவுக்கு..........

அரசியல் வேலைத்திட்டத்திலும் தோழர் ரட்ணா அக்கறைகாட்டினார். அவர் ஈரோஸ் இயக்கத்தின் ஸ்தாபகர் மட்டுமன்றி அந்த அமைப்பின் வழிகாட்டியாகவும் செயற்பட்டார். ஈழத்தமிழர் பிரச்சனைக்கு தீவு காண்பது தொடர்பாக பூட்டானிலும் இந்தியாவிலும் நடைபெற்றபேச்சுவார்த்தைகளில் அந்த அமைப்பின் சார்பில் பங்கு பற்றியிருந்தார்.

1989ம் ஆண்டு ஈரோஸ் அமைப்பின் சார்பில் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். ஆனால மிகக் குறுகிய காலத்தில் புலிகளின் நிர்ப்பந்தம் காரணமாக, தெரிவான அனைத்து பாராளுமன்றப் பிரதிநிதிகளும் தமது பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டி ஏற்பட்டது. ஈரோஸ் இயக்கத்தினை சிதைத்து ஒருபகுதியை புலிகள் விழுங்கிக்கொண்ட பின்

02ம் பக்கத் தொடர்ச்சி

னர் நிரந்தரமாக லண்டனிலேயே தங்கியிருந்த அவர் கடந்த 6 வருடங்களாக நோய்வாய்ப்பபட்ட நிலையில் வாழ்ந்து மறைந்துள்ளார்.


அவர் நம்பிய அவர் முன்னெடுத்த அரசியல், சமூக, பொருளாதார விடுதலைக்கான போராட்டம் எமது சமூகத்தில் பலம்பெற்று நிலைத்து நிற்க முடியாது போனாலும் அப்பளுக்கற்ற சமூக அக்கறையுடன் நம்பிக்கைகளுடன் மரணத்தை தழுவும்வரை தடம்புரளாது வாழ்ந்து மறைந்த தோழர் இரட்ணசபாபதி அவர்களுக்கு சிரம்தாழ்த்தி எமது அஞ்சலியை செலுத்துகின்றோம்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி-
பத்மநாபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் றொபேட் (சுபத்திரன்) பிறந்த தின நினைவு நாள்

## 24.12.2006



தெங்கு சூழ் தென்மராட்சியின் புகழ்
ஓங்கவென வந்துதித்த சுபத்திரனே
மனித நேயத்தில் உயர்ந்த - நீ
மாண்ட பின்னும் உந்தன் புகழ்
உரைப்போம்.

நீண்ட ஈழப் போராட்ட வரலாற்றில்
நித்திலமாய் உந்தன் பெயா திகழும்

வீழ்ந்த பின்னும்
சந்தனமாய் மணம் கமழும்
சுபத்திரனே

தேச விடுதலைக்கு தோள்
கொடுத்தே
பாச உணாவுகளை பற்ற மறந்தாய்
வேசமிடும் புலிகளின் முகத்திரை
கிழித்தே மக்களின் விடுதலையை
நேசித்திருந்தாய்.

ஆயிரம் நிலவுகள் அணி வகுத்தாலும்
ஆதவன் உன் போல் யாா எழுவாா -
ஈழ
தேசத்தின் விடியலுக்காய்
உழைத்திடவே
மீண்டும் ஒருதரம் பிறந்து வா
சுபத்திரனே.

# சர்வதேசங்களின் முக்கிய முதல் கடமை

கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக ஈழத்தமிழ் மக்கள் இனப்பிரச்சினை காரணமாக பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். தற்போது இந் நெருக்கடிகள் முழு தமிழ் மக்களின் வாழ்க்கை அடித்தளத்தையே ஆட்டம் காணச் செய்துவிட்டது. வாழவா சாவா என்ற நிலையில தமிழ் மக்களின் நிகழ்காலப் பொழுதுகள் கழிகின்றன. வன்முறைகளும் மரணங்களும் அன்றாட நிகழ்ச்சிகள் ஆகிவிட்டன. மனித வாழ்வு நெறி பிறழ்ந்தும், தா்ம நியாயங்களை புறந்தள்ளியும், விலங்கு நிலையில் வாழ்க்கையை கழிக்கும் மோசமான நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். நாளைய பொழுது என்பது நம்பிக்கையற்று இன்றைய வாழ்விற்காக எதையும் செய்யலாம் என்ற நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் சா்வதேசத்தின் பங்களிப்பு என்ன என்பதையே இங்கு கூற விளைகிறேன்.

தினமும் மரணத்தின் பிடியில் சிக்கி விடுவோமோ என்ற நிலையில் தத்தளித்துக் கொண்டிருக்கும் மக்கள் கூட்டத்திடம் மனித பண்புகளை மதிப்பதற்கோ அல்லது மானுட தா்மங்களை பற்றி சிந்திப்பதற்கோ செயற்படுவதற்கோ உரிய மனநிலை காணப்பட மாட்டாது என்பது யதார்த்தமாகும்.

இந்த நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத் தமிழ் மக்களின் இக்கட்டான நிலைமை மாற்றம் பெறுவதற்கு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகள் முதலில் தீர்க்கப்பட வேண்டுமா? அல்லது அடிப்படை அரசியல் பிரச்சினை முதலில் தீர்க்கப்பட வேண்டுமா? என்ற விவாதங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இந்த விவாதங்களில் பங்கு பற்றி கருத்துக் கூற முடியாத நிலையில் தமிழ் மக்கள் வன்முறை சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

எந்தப் பிரச்சினை முதலில் தீர்க்கப்பட வேண்டும் என்பது பற்றி தமிழ் மக்கள் சிந்திக்கவோ, அல்லது கருத்துக் கூறவோ முடியாத அளவுக்கு வன்முறைகள் தலைவிரித்தாடுகின்றன. பசி, பட்டினி, பற்றாக்குறைகள் என்பதைவிட இன்று உயிர் தப்பியிருப்பதற்கான உபாயமே முக்கியமாக உள்ளது. உயிர் தப்பினால் மட்டுமே பசி, பட்டினி, பற்றாக்குறையை பற்றி சிந்திக்கவும், அவற்றை போக்குவதற்கான வழிவகைகளை தேடவும் முடியும்.

எனவே முதலில் வன்முறைகளும் கொலைகளும் ஆட்கடத்தல்களும் உடனடியாக நிறுத்தப்பட்டு மக்கள் அச்சமின்றி வாய்திறந்து பேசும், தமது கருத்துக்களை கூறும் வன்முறையற்ற சூழல் உருவாக்கப்பட வேண்டும். மனித உரிமைகள் பேணப்பட வேண்டும். ஒரு பக்க நியாயங்களை மட்டும் கேட்பதற்கும் அதைப்பற்றி மட்டுமே சிந்திப்பதற்கும் தமிழ் மக்கள் வெறும் பொம்மைகள் அல்ல. இதுவரை காலமும் மக்களை பொம்மைகளாக்கிய வன்முறைகள் நிறுத்தப்படுவதை உறுதி செய்வதே சா்வதேச சமூகம் முன் உள்ள முக்கிய முதல் கடமையாகும்.

# தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கை..............

01ம் பக்கத் தொடர்ச்சி

கைக்கு பெற்று கொண்ட பின்பு தொழிலாளர்களின் பிரதிநிதிகள் என்று சொல்லப்படுகின்ற சில தொழிற்சங்கங்களின் முக்கியஸ்தர்களும் தோட்ட முதலாளிமார் சம்மேளனமும் செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தம் தொழிலாளர்களின் அடி மடியில் கையை வைக்க உதவியுள்ளது.

இந்த இரு தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் வாழ்க்கைச் செலவு புள்ளி அதிகரிப்பின் அடிப்படையில் வழங்கப்பட்டு வந்த, தொழிலாளர்களின சம்பள உயர்வு முறையை முதலில் நீக்கப்பட்டது. இதன் பின்னர் இந்த இரு தரப்பு கூட்டு ஒப்பந்தமே தொழிலாளர்களின் தலைவிதியை தீர்மானிக்கும் சக்தியாக மாறியிருக்கின்றது.

கடந்த 2004ம் ஆண்டு தோட்ட முதலாளிமார் சம்மேளனமும் தொழிற் சங்க பிரதிநிதிகளும் செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒரு தேயிலைத் தோட்டத் தொழிலாளியின் அடிப்படை சம்பளம் 135 ரூபா என நிர்ணயிக்கப்பட்டது.

தோட்ட நிர்வாகம் வழங்கும் வேலைநாட்களில் சராசரியாக 65 வீதம் வேலைக்கு சமூகமளிக்கும் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 25 ரூபாவும், அலவன்ஸ் கொடுப்பனவாக 20 ரூபாவும், தோட்ட நிர்வாகம் நிர்ணயித்திருக்கும் அளவை விட மேலதிக கொழுந்து பறிக்கும் ஒருவருக்கு ஒரு கிலோவுக்கு 7 ரூபாவும், தேயிலை விலையேற்றத்தின் அடிப்படையில் 18 ரூபாவுமாக மொத்தம 198 ரூபாவை ஒரு தொழிலாளி வேதனமாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக ஒப்பந்தத்தை அமைத்துக் கொண்டார்கள்.

இறப்பர் தோட்டத் தொழிலாளி ஒருவருக்கு அடிப்படை சம்பளமாக 125 ரூபாவும், அலவன்ஸாக 10 ரூபாவும், 65 வீதம் வேலைக்கு சமூகமளித்த ஒருவருக்கு ஒரு நாளைக்கு 35 ரூபாவும், தோட்ட நிர்வாகம் நிர்ணயித்துள்ள அளவிற்கு மேலதிகமாக எடுக்கும் ஒரு கிலோ இறப்பர் பாலுக்கு 10 ரூபாவும், இறப்பர் விலையேற்றத்தின் அடிப்படையில் 13 ரூபாவும் மொத்தமாக 183 ரூபாவை சம்பளமாக நிர்ணயித்துக் கொண்டார்கள்.

இதன்படி அனைத்து தொழிலாளர்களும் தோட்ட நிர்வாகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட அளவிற்கு மேலதிகமாக கொழுந்து பறிக்கவோ, இறப்பர் பால் எடுக்கவோ மாட்டார்கள் என்பதையும், தேயிலையின் அல்லது இறப்பரின் விலை அதிகரிப்பு என்பது அடிக்கடி நிகழும் ஒன்றல்ல என்பதையும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

அது மாத்திரமன்றி இரண்டு வருடங்களுக்கு ஒருதடவை புதுப்பிக்கப்பட வேண்டிய இந்த ஒப்பந்தம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இறுதியாக கடந்த 2004 ஜுன் மாதம் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமே தற்போதும் நடைமுறையில் உள்ளது. முறைப்படி கடந்த 2006 ஜுன் மாதம் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய ஒப்பந்தம் இன்றுவரை இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் நியாயமான சம்பளம வழங்கக் கோரி வேலை நிறுத்தத்தில ஈடுபட்டுள்ள தோட்டத் தொழிலாளர்கள் அடிப்படை சம்பளமாக 250 ரூபா தரப்பட வேண்டும் எனவும் மேலதிக அலவன்ஸாக 50 ரூபாவும் வேலை செய்யும் நாட்களின் அடிப்படையில் 30 ரூபாவும் உளளடங்கலாக மொத்தம் 300 ரூபா சம்பளமாகத் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து போராடி வருகின்றனர்.

காலத்துக்குக் காலம் வாழ்க்கை செலவு உயர்வுக்கு ஏற்ப சிறிய சம்பள அதிகரிப்பை செய்து உழைப்புக்குத் தகுந்த நியாயமான சம்பளத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தொழிலாளர்கள் பாரிய போராட்டங்களை நடாத்த வேண்டிய நிலைமை காணப்படுவது மிகவும் துக்ககரமான விடயமாகும்.

. தொழிலாளர்கள் நியாயமான சம்பளம் வழங்குமாறு கோரும் போதெல்லாம் கம்பனிகள் நட்டத்தில் இயங்குகின்றன. எனவே தொழிலாளர்கள் கோருவதை போல் சம்பளத்தை வழங்க முடியாது என கம்பனிகள் கையை விரித்து விடுகின்றன.

தங்கள் தொழிற்சாலை நட்டத்தில இயங்குவது பற்றி வாய் திறக்காத கம்பனிகள், தொழிலாளர்கள் நியாயமான சம்பளத்தை கோரும் போது நஷ்டம் என்று கணக்கு காட்ட முனைகின்றனர். அதற்கு உடந்தையாக கை பொம்பம் இடும் தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களை தங்களின் சுய நலன்களுக்காக பயன்படுத்துகின்றன வே தவிர தொழிலாளர்களின் அடிப்படை பிரச்சினை குறித்து அக்கறையோடு செயற்படுகின்றனவா என்பது கேள்விக்கிடமாகியுள்ளது.

இதனால் தமது கோரிக்கையை வென்றெடுக்க தாமே களத்தில் இறங்கியுள்ளனர். இலாபத்தில் இயங்கும் பெருந் தோட்டக் கம்பனிகள் தொழிலாளர்களின் நியாயமான சம்பளக் கோரிக்கைக்கு இணங்கி 300 ரூபா சம்பளம் வழங்க வேண்டும் என்றும், நட்டத்தில் இயஙகுகின்ற கம்பனிகளின கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அரசிடமிருந்து மானியம் பெற்று 300 ரூபா சம்பளத்தை வழங்கலாம் என்று தொழிலாளர்களுக்கு ஆதரவாக குரல் கொடுப்பவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலஙகளை விட தேயிலை உற்பத்தி அதிகரித்தே காணப்படுகின்றது. தேயிலை தோட்டங்களை கம்பனிகள் குத்தகைக்கு எடுப்பதற்கு முன்பாக இருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்திருந்திருந்த போதிலும் உற்பத்தி அதிகரித்தே காணப்படுகின்றது.

தோட்டக் கம்பனிகள் தொழிலாளர்களின் நலன்புரி விடயம், பேறு காலக் கொடுப்பனவு, குடியிருப்பை பராமரித்தல், நோயாளிகளுக்கு போக்குவரத்து வசதி போன்றவற்றை வழங்குவதற்கான செலவுகள் என நாளொன்றுக்கு 25 ரூபாவை தொழிலாளி ஒருவருக்கு செலவிடுவதாக தெரிவிக்கின்றன. ஆயினும் நீண்ட காலமாக இந்த அடிப்படை வசதிகள் எதுவும் மேம்பாடு அடையவில்லை.

நாட்டின் இதர பகுதிகளில் வாழும் மக்களைப் போன்று சுகாதாரம், குடியிருப்பு, கல்வி, சமூக அபிவிருத்தி, போக்குவரத்து ஆகிய சமூக பிரச்சினைகளுக்கு அரசாங்கத்திடமிருந்து தீர்வை பெற்றுக்கொள்ள முடியும். எனவே, தொழிலாளர்கள் தற்போது முகங்கொடுக்கும் பொருளாதார நெருக்கடிக்கு ஏற்றவகையில் அவர்களது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யத் தக்கவாறு அடிப்படை சம்பளத்தை அதிகரித்தாலே போதும் என்று தெரிவிக்கப் படுகின்றது. விலைவாசி அதிகரிப்பு, வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு தோட்டத் தொழிலாளர்களையே மிகவும் மோசமாகப் பாதிக்கின்றன.

உதாரணமாக பெருந்தோட்டத்துறை சார்ந்த தொழிலை தவிர தனியார் ஒருவரிடம் வேலை செய்யும் தொழிலாளி ஒருவர் (விவசாயம்) நாளொன்றுக்கு 500 ரூபாவை வேதனமாகப் பெறுகிறார். அத்துடன் காலை உணவும், பகல் உணவும் வழங்கப்படுகின்றது. தனியார் தோட்டங்களில் மேசன் வேலை செய்வோர் நாளொன்றுக்கு 500 ரூபாவை சம்பளமாகப் பெறுகின்றனர்.

கடந்த ஆண்டு மத்திய வங்கி அறிக்கையின்படி நாலு பேரை கொண்ட குடும்பம் ஒன்றுக்கு ஆகக் குறைந்தது ஒரு மாதத்துக்கு 16,785 ரூபா தேவை என்று கூறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். தோட்டத் தொழிலாளர்கள் 30 நாட்கள் வேலை செய்தாலும் 4050 ரூபாவை மட்டுமே பெறமுடியும்.

மத்தியவங்கி அறிக்கையின் படி 6100 ரூபா மாதந்த வருமானம் பெறும ஒருவர் வறுமை கோட்டிற்கு கீழான வாழ்க்கையையே கொண்டிருக்கிறார் என்றும் அந்த பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார். எனவே அரசு இந்த விடயத்தில் தலையிட்டு தொழிலாளர்களின் பிரச்சினைக்கு நியாயமான தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

பெருந்தோட்டங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமானவையே. அரசாங்கம் பெருந் தோட்டங்களை குறிப்பிட்ட காலத்திற்கு தனியார் கம்பனிகளுக்கு குத்தகைக்குக் கொடுத்துள்ளது. நாட்டின் நிரந்தர தேசிய வருமானத்தை ஈட்டித்தரும் துறையாக பெருந்தோட்டத்துறையே விளங்குகின்றது.

நியாயமான சம்பளத்தை கோரும் தொழிலாளர்களின் பிரச்சினைக்கு சாதகமான தீர்வு காண அரசாங்கம் உதவ வேண்டும். குறைந்தளவு சம்பளத்தில் நாட்டின் வருமானத்தை பெற்றுக்கொடுக்கும் பெருந்தோட்டத்துறை தொழிலாளர்கள் கோரும் சம்பளமானது உயர்ந்து செல்லும் வாழ்க்கை செலவை சமாளிப்பதற்காகும். தற்போது அவர்கள் கோரும நியாயமான சம்பளம ஆடம்பர வாழ்க்கை வசதிகளை அனுபவிப்பதற்கானதல்ல.

பட்டினியின்றி உணவு உண்டு உடல் வலுவோடு தொடர்ந்தும் உழைப்பை நல்குவதற்கான அடிப்படை வசதிகளை பெற்றுக்கொள்வதற்கேயாகும்.

கௌரவ ஜனாதிபதி அவர்கள் முன்வைத்துள்ள "மஹிந்த சிந்தனையில்" பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு முக்கியத்துவம் வழங்கப் பட்டுள்ளது.

இப்போதுள்ள விலைவாசி உயர்வு தொழிலாளர்களுக்கு பெரும் சுமையாக அமைந்துள்ளது. அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் அவர்கள் அடுத்து வரும் வேலைநாளில் உழைப்பை வழங்குவதற்கு உயிரை தக்கவைத்துக்கொள்ள உதவுமேயன்றி நாட்டின் உற்பத்தியை மேலும் திடகாத்திரத்துடன் ஊக்குவிக்கவோ, தங்கள் வருங் கால சந்ததியினரை வளமாக வாழ வைப்பதற்கோ போதுமானதில்லை. தமது இழி நிலையை உணர்ந்த தொழிலாளர்கள் ஒன்றிணைந்து தாமகவே முன்னெடுத்துள்ள உறுதியான போராட்டத்திற்கு தொழிலாளர்களின் நலனில் அக்கறையுள்ள அனைவரும் ஆதரவு நல்கிவருகின்றனர்.

தொழிலாளர்கள் நியாயமான சம்பளத்தை வழங்கக் கோரி மேற்கொள்ளும் போராட்டம் கடந்த காலங்களை போல் இல்லாமல் தொழிற்சங்க பேதமின்றி ஒன்றிணைந்து கறுப்புப்பட்டி அணிந்து வேலை செய்தல், மெதுவாக பணிசெய்தல், கையெழுத்து திரட்டல், மறியல், கடையடைப்பு, கொடும்பாவி எரிப்பு, வாகனப் பேரணி, சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம், ஆர்பாட்ட ஊர்வலம் என பல்வேறு போராட்டங்களை நடாத்திவரு கிறார்கள்.

தொழிலாளர்களுக்கு ஆதரவாக வர்த்தகர்கள், புத்திஜீவிகள், தனியார் பஸ் போக்குவரத்து சேவை ஊழியர்கள் என பலரும் ஆதரவு வழங்கி வருகின்றனர். இந்த போராட்டம் பரந்தளவில் இன, மத, வேறுபாடின்றி இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது.

தொழிலாளர்களின் கோரிக்கைக்கு செவிசாய்த்து அவர்கள் முகங்கொடுக்கும் அவலங்களிலிருந்து அவர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளிருந்து அவர்களை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினதும், தொழிற்சங்கங்களினதும் முழுமுதற் கடமையாகும். தொழிலாளர்கள் கோரும் நியாயமான சம்பளத்தை பெற்றுக் கொடுப்பதன் மூலமே அவர்களின் வாழ்வில் சிறிதளவேனும் மறுமலர்ச்சியை உருவாக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டப்பட்ட முன்னேற்றம் சாதாரணமானதில்லை எஞ்சியுள்ள நெருக்கடிகள் நீங்கவும் தகுந்த, விரைந்த நடவடிக்கை தேவை

யாழ் குடாநாட்டில் ஆகஸ்ட் 11ம் திகதி ஆரம்பிககப்பட்ட தாக்குதலைத தொடர்ந்து அத்தியாவசிய பொருட்களுக்கு இருந்த தட்டுப்பாடு ஓரளவு நீங்கியுள்ளது. இனந்தெரியாதவர்களின மிரட்டலுக்கு பயந்து தனியார் வர்த்தகர்கள் கொழும்பிலிருந்து பொருட்களை கொண்டு வருவதற்கு மறுப்பு தெரிவித்தமையால் தமக்கு தேவையான அன்றாட பாவனைப் பொருட்களை பெற்றுக்கொள்வதில் பாரிய சிரமங்களுக்கு உள்ளாகிய மக்கள் தற்போது படிப்படியாக அந்த நெருக்கடியிலிருந்து ஓரளவு மீண்டுள்ளனர்.

அரசாங்க அதிபர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விநியோகிக்கும் பொருட்களின் அளவு அதிகரித்திருப்பதும், இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் மக்கள் கடைகளாக மாறியிருப்பதும் யாழ் குடாநாட்டில் அத்தியாவசிய பொருட்களுக்கு நில்விய தட்டுப்பாடு குறைவடைய காரணமாகும்.

ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ உள்ளியின் தற்போதைய கள்ளச்சந்தை விலை 250 ரூபாவாக உள்ளது.


கூட்டுறவு கடைகளில் 68 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ சீனி தற்போது 63 ரூபாவிற்கு பாவனையாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. 350 - 400 ரூபாவிற்க ஒரு கிலோ சீனியை பாவனையாளர்களிடமிருந்து வாங்கிய கசிப்பு உற்பத்தியாளர்கள் இப்போது 250 ரூபாவிற்கே கொள்வனவு செய்கின்றனர்.

பொருட்களின் விலைகள் குறைவடைந்திருப்பதற்கு கள்ளச் சந்தை வியாபாரத்தை தடுக்க அரசாங்க அதிபர் எடுத்த நடவடிக்கைகளும் பிரதான காரணம் என்று பொதுமக்கள் மத்தியில் தெரிவிக்கப்படுகின்றது. அரச அதிபரின பணிப்பின் பேரில் அரசாங்க அதிகாரிகள் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதால் கள்ளச்சந்தை வர்த்தகத்தில் ஈடுபட்ட சிலர் கையும் களவுமாக அகப்பட்டுக்கொண்டுள்ளனர். இதனால் கள்ளச்சந்தையின் வேகம் தணிந்துள்ளது.

எரிபொருளுக்கு நிலவிய தட்டுப்பாடும் தற்போது ஓரளவு நீங்கியுள்ளது. பெற்றோல் பங்கீட்டு அட்டைக்கு விநியோகிக்கப்பட்ட போதும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முன்னரை போன்று நீண்ட கியூ இல்லை. எரிபொருளை போத்தல்களில் வைத்து விற்பனை செய்பவர்களிடம் 500 ரூபாவிற்கும் பெறமுடியாதிருந்த எரிபொருள் இப்போது 150 ரூபாவிற்கே தாராளமாகக் கிடைக்கின்றது.



யாழ் மாவட்ட மக்களின் பட்டினியை ஏ 9 பதையை திறப்பதற்கான கருவியாக புலிகள் கருதிச் செயற்பட்டனர். புலிகளின் இந்த நோக்கத்திற்கு ஆதரவாக தமிழ் பிரமுகர்கள் சிலரும், அச்சம் காரணமாக யாழ் மாவட்ட வர்த்தகர்களும் நடந்துகொண்டனர். இதனால் அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு யாழ் மாவட்ட மக்கள் பாரிய நெருக்கடியை எதிர்நோக்கினர். யாழ் மாவட்ட இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி, சிவில இராணுவ இணைப்பதிகாரி எல்.சி.பெரேரா ஆகியோர் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் பிரமுகர்களுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை நடாத்தி மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து உடனுக்குடன் அவற்றுக்குத் தீர்வு காண்பதில் அக்கறையோடு செயற்பட்டதும் நெருக்கடிகள் தணியக் காரணமாகும்.



பால் மா ஒவ்வொரு கட்ட உணவு விநியோகத்தின் போதும் ஒரு குடும்பத்திற்கு ஒரு பால் மா பைக்கற் மட்டுமே வழங்கப்படுவதால் பால் மா பக்கற்றுக்களின் கள்ளச்சந்தை விலை குறைவடையவில்லை. கூட்டுறவு கடைகளில் 177 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படும் அங்கர், நெஸ்பிறே பால் மா பக்கற்றுக்கள் இப்போதும் கள்ளச்சந்தையில் 250 தொடக்கம் 300 ரூபாவரை விற்பனையாகின்றது.

தேங்காய் எண்ணை, மரக்கறி எண்ணை என்பவற்றுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இப்போதும் பங்கீட்டு அட்டைக்கு அரை லீட்டர் வரையே சமையல் எண்ணெய் வழங்கப்படுவதால் கொழும்பில் 460 ரூபாவிற்கு பெறக்கூடிய 3 லீட்டர் ரேஸ்ரி மரக்கறி எண்ணெய் யாழ் குடாநாட்டில் 2100 ரூபா வரை விற்கப்படுகின்றது. அவசர தேவைகளுக்காக வீட்டு விசேஷங்களுக்காக இந்த விலையை செலுத்த நுகர்வோர் தயாராக உள்ள போதும் சமையல் எண்ணெயை இலகுவாகப் பெற்றுவிட முடியாத நிலையே காணப்படுகின்றது.

மீன் விலை சற்று குறைவடைந்துள்ள போதும் சாதாரண மக்கள் வாங்க முடியாத அளவிலேயே மீன் வகைகளின் விலைகள் உள்ளன. அண்மையில் கடலுக்கு செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை தளர்த்தி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட இராணுவத்தினர் அனுமதித்த பின்னர் 1000 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ மீன் 600 ரூபாவாக குறைந்துள்ளது. ஆனாலும், நாள் சம்பளம் 350 ரூபாவக உள்ள தொழிலாளர்களின் குடும்பங்கள் இதனை வாங்கும் சக்தி அற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

மருந்து வகைகள் வைத்தியசாலைகளில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தபோதும் தனியார் கடைகளில் மருந்து பொருட்கள் தீர்ந்து போயவிட்டன. நோயாளர்களுக்குத் தேவையான சோடா பிஸ்கட் வகைகளையும் பெறமுடியாத நிலையே காணப்படுகினறது.

இராணுவத்தினரின் விற்பனை நிலையங்களில் 18 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படும் 12 குளிகைகளை அடங்கிய பனடோல் காட் ஒன்று தனியார் கடைகளில் 50 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது. இது சில வாரங்கள் முன்பாக 100 ரூபாவிற்கும் 125 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்பட்டது.

ஏனைய பொருட்களுடன் ஒப்பிடும் போது பனடோல் குளிகைகளை எடுத்து வருவது சிரமம் இல்லையாயினும் நிர்வாக ரீதியான குறைபாடே தட்டுப்பாட்டுக்கும், கள்ளச்சந்தைக்கும் வழி வகுப்பதாக ஊகிக்க வேண்டியுள்ளது.

தொடர்ச்சி 06ம் பக்கம்

# அகிம்சை வழியே அருமருந்து

காந்திய வழிமுறையிலான போராட்டங்கள், நடைமுறைகள் இன்றைய உலகின் தவிர்க்க முடியாத தேவையாக மேலெழுந்துள்ளன. உலகில் நிகழ்ந்து கொண்டிருக்கும் ஈவிரக்கமற்ற-பயங்கரமான உயிரழிவுகள், சுற்றுச்சூழல் பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்களுக்கு காந்திய வழிமுறை ஒரு அருமருந்தாக காணப்படுகிறது.

பிரமாண்டமான வெகுஜனத்தன்மையும் சகல விதமான அதிதீவிரவாத போக்குகளை நிராகரிப்பதும் சமூக, அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான இடையறாத போராட்டங்களும் இன்று உலகில் பெருவாரியான மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளன. அமெரிக்காவின் கறுப்பின மக்களின் போராட்டக்காரர் மார்ட்டின் லூதர் கிங், தென்னாபிரிக்காவின் நெல்சன் மண்டேலா போன்றவர்கள் இவ் வழியை பின்பற்றினார்கள். ஜேர்மனியில் பாசிசத்தின் கொடூரங்களை அனுபவித்த இயற்பியல் விஞ்ஞானி ஐன்ஸ்டீன் காந்தியடிகளில் பெருமதிப்பு வைத்திருந்தார்.

எமது நாட்டில் நிலவும் சூழ்நிலை வன்முறையற்றதாக மாற்றப்படுவதே இன்று முதலும் முக்கியமானதுமாகும். அன்றாடம் சாவு என்பது சர்வசாதாரணமாகிப் போயவிட்ட, மனித உயிரின மகத்துவம் மலினப்படுத்தப்பட்ட ஒரு சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

கிழக்கிலங்கையில் அகதி முகாம் ஒன்றின் மீது செல்வீழ்ந்து வெடித்து உயிர்கள் பல காவு கொள்ளப்படவும் இன்னும் பலர் காயமடையவும் காரணமான அனர்த்தம் நிகழ்ந்தது. பஞ்சை பராரிகளான அந்த மக்கள் கடந்த ஆகஸ்ட் மாதம் தொடக்கம் மூதூர் கிழக்கு, வெருகல் ஆகிய இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து செல் வீச்சுகளுக்கு நடுவில் பயணம் செய்து அந்த பயணத்தில் உயிர்களையும் காவு கொடுத்து-பட்டினியையும் எதிர்நோக்கி வாகரையில் கரை ஒதுங்கினர். பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் என்று பாரபட்சமில்லாமல் அவர்கள் தற்போது உயிரழிவுகளை சந்தித்திருக்கிறார்கள்.

கந்தலாகிப் போன வாழ்க்கையை கொண்ட இந்த மக்கள் தற்போது மரணத்துக்கும் வாழ்வுக்கும் இடையே போராடிக் கொண்டிருக்கிறார்கள். யாழ் குடாநாட்டில் உணவையும், மருந்தையும் பெற்றுக்கொள்வதற்கான உயிர்ப்பையை தாங்கிப்பிடிப்பதற்கான ஓட்டம் இன்னும் ஓயவில்லை. ஒன்பது பிள்ளைகளின் தாய் வடமராச்சியில் கொலை, வெள்ளவத்தையில் தையல் கடை வைத்திருந்த ஒரு பிள்ளையின் தாய் கொலை, மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் சில குழந்தைகளுக்கும் சிறுவர் சிறுமியருக்கும் உற்றாரும் இல்லை. உறவினரும் இல்லை.

மூதூரில் திரும்பவும் சென்று குடியேறிய முஸ்லீம் மக்கள் பீதியுடன் வாழ்கிறார்கள். கெப்பித்திகொலாவ படுகொலையின் பின்னர் வடக்கு கிழக்கு பிரதேசங்களின் எல்லைகளில் வாழும் சிங்கள மக்கள் அச்சத்துடன் வாழ்கிறார்கள்.

இம் மாதிரியான ஒரு நிலை எமது நாட்டில் தொடரத்தான் வேண்டுமா? நாட்டின் எதிர்காலத்தை நினைக்கும் போது மகப்பயங்கரமாக இருக்கிறது. ஒரு முழு அளவிலான யுத்தம் வெடிக்குமானால் ஏற்படப் போகும் பயங்கரங்கள் நினைத்துப் பார்க்க முடியாததாக இருக்கும் என சமாதான, மனித உரிமை ஆர்வலர்கள் கவலை கொண்டிருக்கிறார்கள். இனவாத நெகிடி நெருப்பு மூட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது.

எல்லோரும் இன்புற்றிருக்கவே இவ்வுலகு. ஆனால் இங்கு பகை கொண்ட உள்ளங்கள் வன்மத்தையும், குரோதத்தையும் வளர்த்துச் செல்கின்றன. அதிகார பேராசை கொண்ட சக்திகள் மக்களின் பேரில் தமது அகங்கார ஆதிக்க பேராசைகளை நிறைவேற்ற சகல தார்மீக மனித உரிமை, ஜனநாயக விழுமியங்களையும் துவம்சம் செய்து செயற்பட முனைந்துள்ளன.

இந்த நாட்டில் பெருவாரியான சிங்கள மக்களோ, தமிழ் மக்களோ, முஸ்லீம் மக்களோ பறங்கி, மலாய் இன மக்களோ நாகரீகமான, வன்முறையற்ற, ஐக்கியமான, சுதந்திரமான வாழ்வொன்றை அவாவுற்று நிற்கிறார்கள். இது இந்த அதிகார அகங்கார சக்திகளுக்கு தெரியாத விடயமல்ல. ஆனால் அவர்களுடைய சுயநலமும், ஆணவமும், கபடமும் இங்கு முதன்நிலை பெறுகின்றன. வினாச காலே விபரீத புத்தி என்பார்கள். இந்த விபரீத புத்தி எமது நாட்டில் கடந்த இரண்டு தசாபதங்களுக்கு மேல் மக்களின் வாழ்வின் மீது பேயாட்டம் போட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த இரண்டு தசாப்த யுத்த வன்முறை சூழலில் எத்தனை பேர் உயிரிழந்தார்களோ அதன் 50 சத வதமானவர்கள் 2004 டிசம்பர் சுனாமியில் அள்ளுண்டு போனார்கள். எமது நாட்டின் கரையோர வாழ்வு நாகரீகம் எல்லாமே பெரும் அனர்த்தத்துக்கு உள்ளாகியது. இந்த அனர்த்தம் நிகழ்நதபோது இந்த நாட்டில் சகல மக்களும் ஒருவரையொருவர் ஆரத்தழுவி கண்ணீர் விட்டார்கள். தமது ஆற்றாமையை வெளிப்படுத்தினார்கள்.

ஆனால் அந்த உன்னதமான கணம் தொடர்வதற்கு ஆயுத, அதிகார அகங்கார சக்திகள் இடமளிக்கவில்லை. இன்று இந்த பூமி இரத்தத்தில் மீண்டும் நனைந்து கொண்டிருக்கிறது. கண்ணீரும், இழப்பும் என்று வாழ்க்கை மரணத்துடன் பந்தயம் நடத்திக் கொண்டிருக்கிறது. "மனதினில் ஒளி உண்டானால் வாக்கினில் ஒளி உண்டாகும்" என்பது பாரதி வாக்கு. ஆனால் இங்கு ஆயுத அதிகார சக்திகளின் மனங்களில் இருள் மண்டிக்கிடக்கிறது. அது நாட்டை இருளாக்கி வைத்திருக்கிறது.

நாங்கள் அன்றாடம் எமது இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் மனித சடலங்களின் குவியல்களையும், காயமடைந்த குழந்தைகளின் அலறலையும், உறவுகளை இழந்தவர்களின் கண்ணீரையும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதனை அன்றாடம் பார்த்தும் கேட்டும் எமது மனங்கள் மரத்துப் போய்க் கிடக்கின்றன. "வாழு, வாழ விடு" என்பது சமூக விழுமியங்கள் பற்றிய அருமையான வாக்கியம்.

இந்த நாட்டில் இனங்களின் சுதந்திரம், சமத்துவம் அங்கீகரிக்கப்படுவதன் மூலமாக உண்மையான ஐக்கியமொன்றை கட்டியெழுப்ப முடியும். "நூறு கருத்துக்கள் மலரட்டும்" என்றவாறு மனித ஆளுமை அங்கீகரிக்கப்பட வேண்டும். உடல் மீதியின்றி அழித்தல் என்ற காட்டுமிராண்டி நிலை இந்த நாட்டிலிருந்து இல்லாதொழிக்கப்பட வேண்டும். இந்த நாட்டு மக்களுக்கு சீரிய வாழ்வொன்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இந்த நாட்டின் வளங்கள், மனிதவளம் உட்பட ஆக்கபூர்வமான வழியில் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

இதற்கு இந்த நாட்டின் அனைத்து நல் இதயம் கொண்ட சக்திகளும் முன்வர வேண்டும். இந்த நாட்டு மக்களின் இரத்தமும், கண்ணீரும் தாராளமாக சிந்தப்பட்டு விட்டது. இலங்கை கடந்து வந்த இரண்டு தசாப்தங்களில் கண்ணீர் துளியாகவும், இரத்தத் துளியாகவும் உலகின் பார்வையில் காட்சியளித்திருக்கிறது. போதும்!

எம் மக்களின் அவலத்தின் வேதனையின் உச்சத்தின் ஆழ்மன உணர்வுகளை புரிந்துகொள்ள முயல்வோம். உலகம் இந்த நாடு மானிட மேன்மையை மீண்டும் உயர்த்திப் பிடிக்க தன்னாலான அத்தனையையும் செய்ய வேண்டும். இது இந்த நாட்டு மக்களின் கனவு. பாலைவனத்தில் தண்ணீர் தேடும் கனவு.

கனவுலக மனுஷி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காந்தி

## வாழ்க்கைச் சித்திரம்

### பி.ஆர். நந்தாவின் நூலில் இருந்து

### மகாத்மா உருவாகிறார்

1914ல் தென்னாபிரிக்காவை விட்டுப் புறப்பட்டார். அங்கு அவர், ஒரு வணிக நிறுவனத்தில் வருடமொன்றுக்கு 105 பவுண்டுக்கு, ஒரு இளநிலை சட்ட ஆலோசகராகச் சென்றிருந்தார். அங்கு தலைமை வகிக்கவென அவர் தங்க நேரிட்டது. அதன்பின் வருடமொன்றுக்கு 5000 பவுண்டு கிடைக்கும். ஒரு தொழிலை அது உச்சத்தில் இருக்கும் போது, தானாகவே விட நேர்ந்தது.

பம்பாயில் ஒரு இளம் வழக்குனராக ஒரு சிறிய சிவில் வழக்கில் வாதிகளை குறுக்கு விசாரணை செய்யும் போது பயத்தினால் அதைத் தொடர முடியாமல் போனது. தென்னாபிரிக்காவில் ஒரு பழுத்த அரசியல்வாதியைப் போல், ஒரு புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்தார். ஐரோப்பிய அரசியல்வாதிகள், ஊழியர்கள் ஆகியோரின் விரோதபோக்கு, இந்திய வியாபாரிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் இயலாமை ஆகியவை அவரைத் திறம்பட செயலாற்ற ஊக்குவித்தன. கவர்ச்சிகரமான பரிசுகள் அவருக்காகக் காத்திருக்கவில்லை. வேலையில் இடையூறுகள், உயிரைப் பறிக்கும் முயற்சி போன்ற ஆபத்துக்கள் ஏற்பட்டன. எது எப்படியோ, அவர் தனது தொழில் மற்றும் அரசியல் பணிகளைத் தென்னாபிரிக்காவில் துவங்கியதும், ஒரு விதத்தில் நல்லதற்கேயாகும்.

இந்தியாவின் பெரிய வக்கீல்கள், தலைவர்கள் முன் தான் ஒன்றுமேயில்லை என்ற நினைப்பே, அவர் தாம் பிறந்த நாட்டில் முன்னேற்றம் காணத் தடையாயிருந்திருந்தும் அவர் நேடால் இந்திய காங்கிரஸை, தமது இருபத்தைந்தாம் வயதில் துவங்கியபோது, ஒரு சிலேட்டுப் பலகையைத்தான் எழுத உபயோகித்தார். வேரூன்றிய அரசியல நிறுவனங்களால் கேலிக்குரியதாகக் கருதப்படும் எண்ணங்களை, அவர் செயல்படுத்திப் பார்க்க முடிந்தது.

அரசியல் உண்மைக்கும், உறுதி மொழிகளுக்கும் ஏது இடம்? இந்த கேள்வி இந்திய அரசியலில் அடிக்கடி எழுந்தது. வெகு நாட்களுக்கு முன்னரே தென்னாபிரிக்காவில் இரண்டுக்குமுள்ள தொடர்பை அவரே பார்த்து உறுதி செய்து கொண்டதால் இக்கேள்வி அவரை சஞ்சலப்படுத்தவில்லை. கொள்கையையே பெரிதாகக் கொள்ளாத கொள்கையைவிட செயலைப் பெரிதாக மதிக்கும் ஒரு மனிதருக்கு அரசியல் மேற்கோள்களாலோ, அரசியல்வாதிகளாலோ தலையிடப்படாத அவருடைய முந்தைய நடவடிக்கைகள் நிச்சயம் அவருக்குச் சாதகமாகவே இருந்தன.

இந்தியாவின் சின்னஞ்சிறு மாகாணங்களைவிட நேடாலோ, ட்ரான்ஸ்வாலோ பெரிதல்ல. காந்தி நடத்திய இந்திய சுதந்திரப் போராட்டம், மிகப் பெரிய அளவிலும், மிகப் பிரச்சினைக்களுக்காகவும நடத்தப்பட்டது. ஆனால அதற்கான உதவேகத்தை அவர் தென்னாபிரிக்கா அனுபவங்களிலிருந்து எடுத்துக்கொள்ளாத சந்தர்ப்பங்களே இல்லை.

அவருடைய அரசியல் மட்டுமன்றி அவருடைய தனிச் சிறப்பியல்புகளும் கூட தென்னாபிரிக்காவில் தான் வடிவம பெற்றன. ஒழுக்கக கட்டுப்பாடு மற்றும் மதம் பற்றிய வினாக்களில் அவருக்கு இளம் பிராயத்திலிருந்தே ஆர்வம் இருந்து வந்தது. ஆனால் தென்னாபிரிக்காவில் தான அவற்றை முறையாக ஆய்ந்தறியும் சந்தர்ப்பம் வாய்த்தது.

ப்ரேடோரியாவிலுள்ள அவரது நண்பர் கழக (Quaker) நண்பர்கள் அவரைக் கிறிஸ்துவராக மதம் மாற்ற முயற்சித்து தோற்றுப்போவார்கள். ஆனால் மத சம்பந்தமாக கற்றறிய வேண்டுமென்ற வேட்கையை அவருக்குள் தூண்டிவிட்டு விட்டார்கள். கிறிஸ்த்துவ மதம் பற்றியும், தமது மதம் உள்ளிட்ட மற்ற மதங்கள் பற்றியும் அறிந்துகொள்வதில் அவர் மும்முரமாக முனைந்தார்.

தென்னாபிரிக்காவில் இருந்த முதல் வருடத்தில் அநேகமாக மதங்கள் பற்றிய கிட்டத்தட்ட எண்பது புத்தகங்கள் படித்திருந்தார். டால்ஸ்டாயின் கடவுளின் ராஜ்யம் உன்னுள் இருக்கிறது. (Kingdom of God is within you) எனும் புத்தகம் அவற்றில் ஒன்று டால்ஸ்டாய் அவருக்குப் பிடித்த எழுத்தாளர் ஆனார். வரும் வருடங்களில் பைபிள்களின் சுருக்கம் (Gospels in Brief) என்ன செய்வது (What to do)நமது காலங்களில் அடிமைத்தள (The Salvery of our times) நாம் எப்படி தப்பிக்கலாம்? (How shall we escape) ஒரு ஹிந்துவுக்குக் கடிதங்கள் (Letters to a Hindu) Kjy mb (The First step) என்ற புத்தகங்களை அவர் படித்தார். டால்ஸ்டாயின் துணிவான கருத்துக்களும், அஞ்சாமல் மனம் திறந்து சொல்லும் திறனும், அவரைப் பெரிதும் கவர்ந்தன.

திட்டங்களுக்கு அப்பாற்பட்ட கிறிஸ்த்துவ நம்பிக்கை மத ஸ்தாபனங்கள காந்திமீது பரப்பியிருந்த மந்திர கட்டை மறையச் செய்தது. ஒழுக்கக் கோட்பாடுகள் தினசரி வாழவுடன் ஒத்து இருக்க வேண்டுமென்ற டால்ஸ்டாயின் வலியுறுத்தல், ஆகியன சுய முன்னேற்றத்திற்கான அவர் கொண்ட முயற்சிகளை ஊர்ஜிதப்படுத்தின.

காந்தியைப் போல் சிறுகப் படித்து பெரும் பயன் அடைந்த மனிதர்கள் குறைவே. புத்தகம் என்பது காந்திக்கு அந்த நேரததிற்க மட்டுமான பொழுது போக்கு அல்ல. அவை ஏற்கவோ, ஒதுக்கவோ கூடிய அனுபவங்கள் அடங்கியவை ரஸ்கினின் இறுதி வரையில் (Unto the lost) நேடால் தலைநகரிலிருந்து பாலைவனம் போன்ற ஜுலுலான்ட் (Zululand) டில் உண்மையாகவே நெற்றி வியர்வை நிலத்தில் விழ வாழும் தானே ஏற்றுக் கொண்ட ஒரு ஏழ்மையான வாழ்வை மேற்கொளளவென, உடனே செல்லும வேகத்தை அவருக்குக் கொடுத்தது. காந்தியின் மேல் ஏற்பட்ட ஆழ்ந்த பாதிப்புக்களின் ஒரு காரணமாக டால்ஸ்டாயின் புத்தகங்களைச் சொல்லலாம். அவர் பகுத்தறியாமல் எல்லாவற்றையும் பின்பற்றுபவர் அல்ல என்பதையும் சொல்ல வேண்டும். முழுதும் வளர்ச்சியடையாத தனது நம்பிக்கைகளையே விரிவான கருத்துக்களாக கொண்ட ஒரு எழுத்தாளரை அவர் டால்ஸ்டாயில் கண்டார்.

தற்கால அரசு வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ நடத்தும் வன்முறை, ஒத்துழையாமை நடத்த குடிமகனின் உரிமை, அவற்றுக்கான ஆதரவை மட்டுமே டால்ஸ்டாயில் காந்தி காணவில்லை. வேறுபல பல்வேறு விஷயங்களிலும் நவீன நாகரீகம மற்றும் தொழில் மயத்திலிருந்து பாலியல், பள்ளிகள் வரையிலான டால்ஸ்டாயின் கணிப்புகளை அவர் ஏற்றுக்கொள்ளத் தலைப்பட்டார். இருவருக்குமிடையே நிகழ்ந்த கடிதப் பரிமாற்றம், தனது தொழிலின் தலைவாயிலில் நிற்கும் இளம் இந்தியனின் நன்றி, மரியாதை, வயதான டால்ஸ்டாயின் மகிழ்ச்சி கலந்த வியப்பு. இவற்றை தெளிவாகக் காட்டுகின்றன.

காந்திக்கு டால்ஸ்டாய் இவ்விதம் எழுதினார். ஆகவே டிரான்ஸ்வாலில் உனது நடவடிக்கை உலகின் கோடியில் இருக்கும் எங்களுக்குத் தோன்றும் வரை ஒரு மிகவும் தேவையுள்ள வேலை, உலகில் தற்போது நடைபெறும எல்லா பணிகளையும் விட, மிகவும் முக்கியமானது. அதில் கிறிஸ்த்துவ நாடுகள் மட்டுமன்றி அனைத்துலகுமே சந்தேகமின்றி பங்கேற்கும். தென்னாபிரிக்காவில் கிறிஸ்த்துவ, இஸ்லாமிய



புத்தகங்கள் எளிதில் கிடைத்தபோது, இந்து மதப் புத்தகங்களை, காந்தி இந்தியாவிலிருந்து தருவிக்க வேண்டியிருந்தது.

காந்தியின் போலி நண்பர்கள், அவர் கிறிஸ்தவராகத் தயாராகிக்கொண்டிருக்கிறார் என நம்பும் வேளையில இந்து மதத்தின் மேல் ஒரு தீவிரப் பிடிப்பு ஏற்படுத்தியது. அவர் தன் நண்பர் ராய் சந்த் பாயுடன் கொண்ட கடிதத் தொடர்பு. மதங்களை ஒப்பிட்டு பார்க்க பல மத புத்தகங்களைப் படித்தும், கடவுள் மத சம்பந்தப்பட்ட நூல்களை ஆராய்ந்தும், அறிஞர்களுடன் உரையாடல் மற்றும் கடிதங்கள் மூலம தொடர்பு கொண்டும், உண்மையான மதம் என்பது அறிவைவிட மனதைப் பொறுத்த விஷயம் என்றும், உண்மையான நம்பிக்கைகள் நடைமுறையில் வாழ்ந்து காட்டப்படுபவை என்ற முடிவுக்கும் காந்தி வந்தார்.

இந்த வருடங்களில் காந்தியின் வாழ்க்கை முறையும் மாற்றமடைந்தது. அவர் ஆன்மீக அகராதி எனக் குறிப்பிட்ட கீதாவிலிருந்து அவர் தானாகவே ஏற்றுக்கொண்ட வறுமைப் பாதையில் இட்டுச் சென்ற சொந்தம் கொண்டாடாமை, பொதுச் சேவை செய்வதற்கான அலாதியான வலிமையைத் தரும் தன்னலங்கருதா சேவை ஆகிய கருத்துக்களை அவர் தன்னுள் வாங்கிக் கொண்டார். தென்னாபிரிக்காவிலுள்ள மிகவும் ஏழ்மையான ஒப்பந்த தொழிலாளர்களைக் கவனித்துக் கொள்ளவெனத் தர்ம ஆஸ்பத்திரியில் கம்பவுண்டர் பயிற்சி மேற்கொண்டார். அவரும் அவரது கருத்துக்களை பகிர்ந்து கொள்வோரும், பட்டணத்து தூடு புழுதி ஆகியவற்றிலிருந்தும். மனிதர்களின் பொறாமை, வெறுப்பிலிருந்தும் தப்பி, ஒரு பத்திரமான இடத்தில் இருக்கவென, டர்பனை அடுத்துள்ள . பீனிக்ஸ் நகரிலும் டால்ஸ்டாய் பண்ணை அருகிலுள்ள ஜோஹன்னஸ்பர்க்கிலும் அவர் சிறிய குடியிருப்புக்களை அமைத்தார்.

முப்பதாவது வயதின் இறுதியில் காந்தி எப்படியிருந்தார் என்பதை, அவருடைய சரிதையை முதன் முதலில் எழுதிய, ஜோஹன்னஸ்பர்க்கைச் சேர்ந்த ரெவெரென்ட் ஜோசப் ஜ.டோக் என்பவரின் எழுத்தோவியத்திலிருந்து அறியலாம். ஒரு சிறிய, வெட வெட வென்றிருந்த, ஒல்லியான உருவம் என் முன் நின்றது. ஒரு தூய்மையான, தீர்க்கமான முகம் என் முகத்தைக் கூர்ந்து நோக்கியது. தோல் கறுப்பு, கண்கள் கறுப்பு, ஆனால் முகத்தைப் பிரகாசமாக்கிய புன்னகை, அச்சமற்ற நோக்கு, இவை உடனே உள்ளத்தை கொள்ளை கொண்டன. அவருக்கு சுமார் முப்பத்தெட்டு வயதிருக்கலாம் என நான் எடை போட்டது சரியாகவே இருந்தது. அவர் சரியான ஆங்கிலம் பேசினார். நிச்சயம் நாகரீகமறிந்த மனிதராகத் தோற்றமளித்தார். அவரைச் சுற்றி தெரிந்த ஏதோ ஒரு வலிமை, ஒரு உயர்ந்த உள்ளம், ஒரு ஒளிவு மறைவற்ற நாணயம் இவை என்னை இந்திய தலைவர்பால் உடனடியாக ஈர்த்தன. நமது இந்திய நண்பர் மற்ற மனிதர்களைக் காட்டிலும் உயர்ந்த உள்ளம் கொண்டவர். அவருடைய செயல்கள், பேதானியைச் சேர்ந்த மேரி (Mary of Bethzny) யைப் போல், எப்பொழுதும் விசித்திரமாகவும், அடிக்கடி தவறாகவும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அவரை நன்கு அறியாதவர்கள், அவருடைய தீவிரமான உலகப் பற்றின்மைக்கு ஏதோ ஒரு தப்பான நோக்கத்தையும் அவருடைய கீழை நாட்டு ஒல்லி உருவத்தையும் தான் காரணமாக கற்பித்துக்கொள்வர்.

ஆனால் அவரை நன்கு அறிந்தவர்கள் அவர் எதிரில் நிற்பதற்கே வெட்கப்படுவர். பணம் அவரைக் கவரவில்லை என்பது என் எண்ணம். அவருடைய சொந்த நாட்டவர் அவரைக் கண்டு வியக்கின்றனர். அவருடைய வினோதமான சுயநலமின்மையைக் கண்டு கோபமுறுகின்றனர். பெருமையுடனும், நம்பிக்கையுடனும் அவரை நேசிக்கின்றனர். அவர் எத்தகைய உயர்ந்த குணங்கள் கொண்டவரென்றால் அவருடன் நடப்பதே அறிவு பூர்வமான அனுபவம் அவரை அறிவது அன்பை அறிவதாகும்...

தொடரும்.....

## எட்டப்பட்ட முன்னேற்றம்............... 05ம் பக்கத் தொடர்ச்சி

பாவனைப் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக தமக்குகிடைக்கும் இந்த பொருட்களை கள்ளச்சந்தையில் விற்று தமக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை வாங்கும அவல நிலையும் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. 10 ரூபாவிலிருந்து 15 ரூபாவரை வாங்கக் கூடியதாகவிருந்த தேங்காயின் விலை 70 ரூபாவிலிருந்து 90 ரூபா வரை உயர்ந்துள்ளது. இதனால், தினமும் சகலருக்கும் தேவையான தேங்காய் போன்ற அத்தியாவசிய பொருட்களை வாங்க தமக்கு கிடைக்கும் சீனியையும், சவர்க்காரத்தையும், பனடோலையும், ஒருவர் விற்க நினைப்பதை குற்றம் என்பதா? அவலம் என்பதா?

தமிழ் மக்கள் நத்தார், புதுவருடம், தைபொங்கல் போன்ற பண்டிகைகளை எதிர்கொள்ளவுள்ளனர். இந்த பண்டிகைகளை கொண்டாடும் மக்களுக்குத் தேவையான பொருட்களை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது, இந்த பொருட்கள் அனைத்து மக்களுக்கும் தேவையான அளவில் கிடைப்பதற்கு ஆவன செய்யப்பட வேண்டும். கடந்த நவராத்திரியின் போது வழங்க [illegible] 200 கிராம் பயறு, 150 கிராம் அவல், 200 கிராம் கடலை என வழங்கப்படுமானால் பயனற்றதாகும். பண்டிகை கொண்டாட்டத்திற்குத் தேவையான பொருட்கள் விநியோகிப்பதாயின் நியாயமான அளவில், அனைவருக்கும் கிடைக்கக் கூடிய வகையில் விநியோகிக்கப்பட வேண்டும். கேக் தயாரிப்பதற்கான பொருட்கள், சமைய்ல் எண்ணெய், பச்சை அரிசி, தேங்காய் போன்ற பொருட்களுக்கு இப்போதே தட்டுப்பாடு நிலவுவதால் அவற்றை எடுத்துவந்து விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

யாழ் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறைத்து மதிப்பிடக் கூடியதில்லை. அவை பல முட்டுக்கட்டைகளுக்கு மத்தியில் எட்டப்பட்டவை. அந்த முட்டுக்கட்டைகள் குறித்து தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள் என்பதால் அது பற்றி இங்கு விபரிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், தற்போது காணப்படும், எஞ்சியிருக்கும பற்றாக்குறைகள் நீங்கி மனிதாபிமான நெருக்கடிகள் முடிவுக்கு வரவும், தொழில் வாய்ப்பையும், வருமானத்தையும் இழந்த மக்களுக்கு அந்த வசதி வாய்ப்புக்கள் மீண்டும் கிடைக்கவும், தகுந்த விரைந்த நடவடிக்கைகள் வேண்டும்.

கால் நடைகளுக்கான உணவு வகைகள், விவசாயிகளுக்கு தேவையான உரவகைகள், கிருமிநாசினிகள்; பெரும்பாலானவர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்கவும், புனர் நிர்மாண நடவடிக்கைகளுக்கு அவசியமானதுமான சீமெந்து மற்றும் கட்டிடப் பொருட்கள் முதலியதனைத்தும் கடல் மார்க்கமாக யாழ் குடாநாட்டுக்கு எடுத்துவரப்பட்டாலே இயல்பு நிலை தேன்றும்.

மக்களின் தேவைகள் உணவுப் பொருள் விநியோகத்துடன் நிறைவெய்திவிடாது. குறைந்த பட்சம் தொழில் வாய்ப்பு, மாணவர்களின் கல்வி, புனர் நிர்மாணப் பணிகள் என்பவற்றுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களும் எடுத்து வரப்பட வேண்டும். குடாநாட்டின் மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு மீள்வதற்கு, இயல்பு நிலை பேணப்படுவதற்கு இவை அத்தியாவசியமாகும்.

இதேவேளை புலிகளின் கபடத்தனங்களுக்குள் அகப்படாதிருப்பதும் மக்களின் நிம்மதிக்கும், அமைதிக்கும் முன்நிபந்தனையாகும். என்பதை புரிந்துகொள்வதும் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இறுதி யுத்தத்திற்கு நிதியுதவி செய்தல்"

## புலம் பெயர்ந்த தமிழர்களிடம் புலிகள் இயக்கத்தின் அச்சுறுத்தல்களும் பலாத்கார பணப்பறிப்பும்.

1994ம் ஆண்டு பாரிசில் சபாரட்ணம் சபாலிங்கம் என்பவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவமும் தமிழர்கள் அடிக்கடி கவனத்தில் எடுத்துக்கொள்ளும் ஒன்றாகும். தனது குடுமபத்தவர்களின் கண முன்னாலேயே மரண தண்டனை வழங்கப்படுகின்ற பாணியில் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் தனக்கிருந்த தொடர்புகளை அடிப்படையாக வைத்து, புலிகள் இயக்கத்திற்கு எதிரான ஒரு புத்தகத்தை வெளியிடுவதற்கான பணிகளை சபாலிங்கம் மேற்கொண்டிருந்ததாக சொல்லப்படுகிறது. இக் கொலைகளை செய்தவர்கள் என சந்தேகிக்கப்பட்டவர்கள் நன்கு பயிற்றப்பட்ட இரு புலி இயக்க ஆயுததாரிகள் என இனங் காணப்பட்டாலும், அதை நேரடியாக உறுதிப்படுத்த சாட்சிகள் முன்வராத நிலையில் இந்த நபர்கள் ஒரு காலமும் தண்டனைக்கு உள்ளாக்கப்படவல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

சுதந்திரமான தமிழ் ஊடகவியலாளருக்கான அச்சுறுத்தல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. புலிகள் இயக்கத்தை விமர்சிக்கும் வகையிலான கட்டுரைகளை எழுதுபவர்களை கைவிடும்படி பத்திரிகை உரிமையாளருக்கு தொடர்ச்சியான அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன. தமக்கு அச்சுறுத்தல் தொலைபேசி அழைப்புக்கள் வருவாதாக தனிப்பட்ட ஊடகவியலாளர்கள் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தனர். **உன்னுடைய பத்திரிகைக்கூடாக புலிகள் இயக்கத்தின் குறிக்கோளை நீ ஆதரிக்கவில்லை என்றால், நாங்கள் உன்னை கவனித்துக் கொள்ளுவோம** என புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர் ஒருவர் தமிழ் பத்திரிகையாளர் ஒருவரிடம் கூறியுள்ளார்.

2005 ஆண்டு அக்டோபரில் மேற்கு அவுஸதிரேலியா பல்கலைக் கழகத்தில் நீதித்துறை விரிவுரையாளரும் அரசியல பத்தி எழுத்தாளருமான செல்லையா நாகராஜா என்பவருக்கு எதிராக, அவுஸ்திரேலியாவில் உள்ள புலிகள் இயக்கத்தோடு தொடர்பான குழ ஒன்று மரண அச்சுறுத்தல் விடுத்தது, புலிகள் இயக்கத்திற்கு எதிராக எழுதுவதை நாகராஜா நிறுத்த வேண்டும் என எச்சரித்தது. **இது எமது இறுதி எச்சரிக்கை** என்று குறிப்பிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களை, எல்லாளன் படை என்னும் குழுவானது மெல்போர்னில உள்ள இந்து ஆலயமொன்றில் வைத்து விநியோகித்தது. அதே மாதம் நாகராஜாவிற்கு கிடைக்கப்பெற்ற எச்சரிக்கைக் கடிதத்தில், **உன்னுடைய எழுத்து உன்னை மரணத்திலதான் கொண்டுபோய் விடும். துரோகிகளைக் களையெடுப்பதற்கான காலம் இதுதான். வெகு விரைவில் உனது மரணத்தைப் பற்றி தமிழ் சமூகமும் உனது நண்பர்களும் தெரிந்து கொள்ளுவார்கள். மற்றைய துரோகிகளுக்கும் இது ஒரு பாடமாக இருக்கும்** என எழுதப் பட்டிருந்தது.

லண்டனில் இருந்து இயங்கும் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (TBC) என்னும் வானொலியும் அங்கு சுயவிருப்பில் பணியாற்றுபவர்களும் குறிப்பான இலக்குகாளக்கப்பட்டுள்ளனர். **TBC** யானது புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அத்துமீறல் செயற்பாடுகள் தொடர்பாக தொடர்ச்சியாக நிகழ்ச்சிகளை ஒலிபரப்புச்செய்கின்ற, சுதந்திரமானதொரு வானொலியாகும். **TBC** வானொலியின் நிகழ்ச்சிப் பணிப்பாளர் ரி. ராமராஜ் தொடர்ச்சியாக மரண அச்சுறுத்தல்களைப் பெற்றுள்ளதோடு, அந் நிலையத்தில் கடமையாற்றும் தன்னார்வப் பணியாளர்களும்கூட அச்சுறுத்தல் மற்றும் அவதூறு நிறைந்த தொலைபேசி அழைப்புக்களை கிரமமாகப் பெறுகின்றனர்.

**TBC** வானொலி வாராந்தம் நடத்துகின்ற நிகழ்ச்சி ஒன்றில் சுய விருப்பில் பங்குபற்றிய ஒருவர் 2005 நவம்பர் மாதத்தில் மனித உரிமை கண்காணிபபு அமைப்பிடம் பின்வருமாறு கூறினார். **TBC** வானொலிக்கு நான் உதவி செய்ய ஆரம்பித்த உடனேயே எனக்கு தொலைபேசி அழைப்புக்கள் வர ஆரம்பித்தன. அவர்கள் எனது மனைவியை அச்சுறுத்தினார்கள். நான் **TBC** வானொலிக்கு உதவி செய்வதை நிறுத்த வேண்டும் எனவும், **TBC** வானொலியானது துரோகிகளின் வானொலி என்றும் அவர்கள் என் மனைவியிடம் கூறினார்கள். அவர் இலங்கையில் வடபகுதிக்கு திரும்பிப் போனால் அங்கு எனக்கு பாதிப்பு ஏற்படும் எனவும் சில தொலைபேசி அழைப்புக்களில் அச்சுறுத்தல் விடப்பட்டதாக அவர் கூறினார்.

2005ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தொலைபேசியில் தன்னை அழைத்த ஒருவர், உன்னை சிறையில் அடைப்பார்கள், நீ ஒரு துரோகி, நீ கொல்லப்படுவாய். என்று கூறியதாகவும், அவர் எம்மிடம் கூறினார். 2005 பிற்பகுதியில் அதே பணியாளரின் மனைவிக்கு கிடைக்கப்பெற்ற மின்னஞ்சல் செய்தியில் அவளுடைய கணவர் **TBC** வானொலிக்கு செல்வதை உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. **உனக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றன. உனது கணவரை அதில் இருந்து விலத்தச் சொல். அல்லது நீ விதவையாக நேரிடும்,** என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

2004 ஜுலை மாதம் **TBC** வானொலி நிலையம் குண்டுத்தாக்குதலுக்கு உள்ளாக்கப்படும், என தொலைபேசியில் ஒருவர் எச்சரிக்கை விடுத்தார். 2005 மே மாதம் இலண்டனில் உள்ள **TBC** காரியாலயத்திற்குள் உடைத்துக்கொண்டு அத்துமீறி நுழைந்தவர்கள் அதன் சொத்துக்களை சேதப்படுத்தியதோடு ஒலிபரப்பு கருவிகளையும் கொள்ளையிட்டுச் சென்றனர். இலண்டன் நகரப் பொலிசார் இச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தியபோதும், இக் குற்றச் செயல்கள் தொடர்பாக இதுவரை எவரும் தண்டிக்கப்படவில்லை.

**TBC** யானது, தமிழ் சமூகத்தில் இருந்து கிடைக்கப்பெறும் சுயவிருப்பிலான பங்களிபபுக்களின் மூலமே முற்றும முழுதாக நடத்தப்படுகின்றது. அங்குள்ள பிரதிநிதி ஒருவர் எம்மிடம் கருத்துக்கூறுகின்ற பொழுது **நாங்கள் வர்த்தக ரீதியில் இதை நடத்த முடியாது. மக்கள் எம்மிடம் விளம்பரம் செய்தால் அவர்கள் இடைஞ்சலுக்கு உள்ளாக்கப்படுவார்கள் அவர்களின் வீடுகளுக்கு நபர்கள் செல்வார்கள். ஆகவே எங்களால் வர்த்தக விளம்பரங்கைளப் பெற்றுக்கொள்ள முடியாது** என்று சொன்னார்.

கனடாவிலும் இங்கிலாந்திலும் புலிகள் இயக்கத்தின் அத்துமீறல்களுக்கு எதிராக வெளிப்படையாக பேசுபவர்கள், அல்லது புலிகள் இயக்கத்தை தவிர்த்து சுதந்திரமான நிகழ்வுகளை ஒழுங்கு செய்யும் செயற்பாட்டாளர்கள், சேறடிப்பு பிரச்சாரங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். நாம் மேலே குறிப்பிட்ட **TBC** வானொலியில் பணியாற்றும் அதே நபர் எம்மிடம் கூறும் பொழுது, தான் இந்திய இரகசிய புலனாய்வுப் பிரிவினரிடம் இருந்து பணம் பெற்றுக்கொள்வதாக, தனக்கு எதிரான வதந்திகள், தமிழ் சமூகத்தினரிடையே பரப்பி விடப்பட்டுள்ளதை, 2005ம் ஆண்டு பிற்பகுதியில் நடந்த ஒரு சமூக நிகழ்வில் வைத்து, தான் அறிந்து கொண்டதாக கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், அவர்கள் என்னைப் பற்றி இலண்டன் முழுவதும் கதைத்துத் திரிகிறார்கள். நான் ஒரு துரோகி என்று கதைகளை பரப்புகிறார்கள். நியாயமான உண்மைகள் வெளிக் கொண்டுவரப்படல் வேண்டும் என்பதற்காகவே **TBC**க்கு நான் உதவி செய்ய வந்தேன். ஆனால் அவர்கள் நான் ஏதோ தவறானதை செய்வதுபோல் படம் போட்டு காண்பிக்க முயற்சிக்கின்றனர் என்றார்.

இங்கிலாந்தில் வசிக்கும் வழக்கறிஞரான செய்யத் பசீர் என்பவர், புலிகள இயக்கத்தினால் கிழக்கு இலங்கையில் முஸ்லீம்கள் படுகொலை செய்யப்படுவது தொடர்பாக பகிரங்கமாக பேசியதற்காக, அல்ஹைதா இயக்கத்தோடு அவருக்கு தொடர்பு இருப்பதாக, புலிகள இயக்கத்தோடு மிக நெருக்கமாக தொடர்பைக் கொண்ட இணையத்தளம் ஒன்று, 2005 ஆண்டு டிசம்பரில், அவரைக் குற்றம் சாட்டியது. பசீர் ஓர் தமிழ் பேசுகின்ற முஸ்லீம் என்றும், இலங்கையில் அல்ஹைதா பிரிவின் இங்கிலாந்துப் பிரதிநிதி அவர் என்றும் நிதர்சனம் வெப்தளம் கூறியதோடு, ஓசாமா பின் லாடனின் ஜிகாத் கொள்கை மற்றும கோட்பாடுகளை பரப்புவதன் மூலம், இவர் வன்முறைகளை தூண்டுகிறார் என்றும் கூறியது. அவ் இணையத்தளமானது பசீருடைய புகைப்படத்தை பிரசுரித்ததோடு, இவ்வாறான தனிநபர்களின் நடவடிக்கைகள் நசுக்குவதற்காக இங்கிலாந்து அரசாங்கத்தை நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக் கொண்டது.

புலிகள் இக்கத்தோடு தொடர்புள்ள இணையத்தளங்கள் மூலமாக தாங்கள் குறிவைக்கப்படுகன்றமை தொடர்பாக புலம்பெயர் தமிழ் சமூகத்தின் அங்கத்தவர்கள் மிகவும் அவதானமாக இருப்பது நியாயமானதே. ஏனெனில் பசீருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்படுவதற்கு இரண்டு மாதங்களுக்கு பின்புதான், நிதர்சனம் இணையத்தளமானது, யாழ்ப்பாணத்தில் உள்ள மத்திய கல்லூரியின் அதிபர் கே. இராஜதுரை தொடர்பாக குறிப்பு ஒன்றை பிரசுரித்து இருந்தது. அதில், அவரின் **கழுத்தைச் சுற்றி கட்டப்பட்ட பெயர்ப் பலகையுடன் அவரின் பிரேதம் விரைவில் கணடெடுக்கப்படும்** எனக குறிப்பிட்டிருந்தது. இது பிரசுரிக்கப்பட்ட சில நாட்களின பின்னர் இராஜதுரை அவரின் பாடசாலைக்கு அருகாமையில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

2005 அக்டோபர் மாதம் ந.மு. பொன்னம்பலம் என்னும் தமிழ் சமூகத்து தலைவர், தன்னை உடல் ரீதியாக தாக்கியதாக புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர் ஒருவர் வழங்கிய பிழையானதொரு முறைப்பாட்டினால் டொரன்டோ பொலிசாரினால் அவர் கைது செய்யப்பட்டார். செப்டம்பர் மாதப் பிற்பகுதியில், இலங்கையில் உள்ள அரசியல் [illegible] தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி பங்குபற்றிய பொதுக்கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்வதற்கு ஆதரவு வழங்கியதோடு ந.மு. பொன்னம்பலம் அக் கூட்டத்திற்கு தலைமையும் தாங்கினார்.

இது நடந்து ஒரு வாரத்தின் பின்னர் ஒக்டோபர் 4ம் திகதி, கொல்லப்பட்ட இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் பங்குபற்றிய ஒருவர். கடந்தவார நிகழ்வின் பொழுது பொன்னம்பலமும் இன்னும் சிலரும் தன்னை அச்சுறுத்தியதாகவும் உடல் ரீதியாக தாக்கயதாகவும் முறையிட்டார். பொலிசாரினால் கைது செய்யப்பட்ட பொன்னம்பலம், கை விலங்கிடப்பட்டு, ரொடன்டோ பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அவர் மீதான குற்றச் சாட்டுக்கள் எவ்வித ஆதாரமும் அற்றவை என வெளிப்படையாக தெரிய வந்ததால் ஒரு சில மணி நேரத்துக்குள் அவர் விடுவிக்கப்பட்டார். எவ்வாறாயினும், அவரின் கைது தொடர்பான விபரங்கள் டொரன்டோவில்




வெளிவரும் பிரசித்தமான தமிழ்ப் பத்திரிகையான ஈழநாடுவில் வெளிவந்தது. இச் சம்பவம் தொடர்பான செய்தி அப் பத்திரிகையில் மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டமையானது, தனது குடும்ப அங்கத்தவர்களை நெருக்குவாரத்திற்கு உட்படுத்துவதற்கும் தனது குடும்ப கௌரவத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்காகவும். வேண்டுமென்றே செய்யப்பட்டதாக பொன்னம்பலம் நம்புகின்றார்.

புலிகள் இயக்கமும் அதன் ஆதரவாளர்களும், மாற்றுக் கருத்துக்கொண்டவர்களை எச்சரிக்கும் செய்திகளை அனுப்புவதற்கு, மேற்கு நாடுகளிலும் இலங்கையிலும் வாழும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களையே அனேகமாக பயன்படுத்துகின்றனர். புலிகள் இயக்கத்தின் பிரதிநிதி ஒருவர் தன்னை எச்சரித்ததாக சொல்லிய தனது உறவினர் ஒருவர் **நீ உன்னை கட்டுப்படுத்திக் கொள்ளவல்லையானால் அவர்கள் உன்னை கவனித்துக் கொள்ளுவார்கள்.** என்று தனக்கு தொலைபேசி மூலம் அறிவித்ததாக டொரன்டோவில் உள்ள ஒரு செயற்பாட்டாளர் எம்மிடம் கூறினார். இலண்டனில் வாழும் செயற்பாட்டாளர் ஒருவர் வானொலி நிகழ்ச்சி ஒன்றுக்கூடாக புலிகள் இயக்கத்தை விமர்சித்த பின்னர், இலங்கையில் வாழும் அவரது சகோதரனால் தொடர்பு கொள்ளப்பட்டார். அவரது சகோதரன் இலங்கையில் அவரின் நண்பன் ஒருவரின் வீட்டிற்கு அழைக்கப்பட்டிருந்தார். அங்கு அவர் இரு புலிகள் இயக்க அங்கத்தவர்களை சந்திக்க நேர்ந்தது.

**உனது சகோதரன் வாயை மூடிக கொண்டு இருக்க வேண்டும் அல்லது அது அவருக்கு நன்மையாக இராது.** என அப்புலிகள் இயக்கத்தவர்கள் அவரிடம் கூறியுள்ளனர். புலிகள் இயக்கத்தின் வெளிப்படையான உத்தரவின் பேரிலேயே தான் அவரை வீட்டுக்கு அழைத்திருந்ததாக அந்த நண்பர் பின்னர் சகோதரனிடம் கூறினார். தற்போது **எனது சகோதரன் தனது குடும்ப அங்கத்தவர்களைப் பற்றி மிகவும் யோசித்தவாறு உள்ளார்.** என இலண்டனில் வசிக்கும் அந்த செயற்பாட்டாளர் எம்மிடம் கூறினார்.

புலிகள் இயக்கம் தொடர்பாக விமர்சிப்பவர்களை மௌனமாக்குவதற்கு அனேகமான சம்பவங்களில், வெளிப்படையான அல்லது முழுமையான அச்சுறுத்தல்கள்கூட அவசியப்படுவதில்லை. பிரபலமாக எல்லோரும் அறிந்த சம்பவங்களான கொலைகள், தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் போன்றவையே புலம் பெயர் சமூக அங்கத்தவர்கள் தங்களைத் தாங்களே எச்சரித்துக்கொள்ள போதுமனவை. இலங்கையில் வாழுகின்ற குடும்ப அங்கத்தவர்கள் உட்பட, நிகழக்கூடிய மோசமான பின் விளைவுகளைப்பற்றி கவலைப்படுவதினாலேயே, தங்கள் குடும்ப அங்கத்தவர்களை அவர்களது உறவினர்கள் வெளிப்படையாக கதைக்காதீர்கள் என வலியுறுத்துகிறார்கள். இலங்கையில் புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சாட்டப்படுகின்ற தொடர்ச்சியான அரசியல் கொலைகளாவன, எவருமே ஆபத்தான நிலையில்தான் இருக்கிறார்கள் என்பதையே அனேகமான தமிழர்களுக்கு உணர்த்திக்கொண்டு இருக்கிறது.

புலிகள் இயக்கத்திற்கு எதிரானது என தமிழ் ஊடகங்களால் இனங் காட்டப்படுகின்ற, டொரன்டோவில் கலாச்சார நிகழ்வுகளை மேற்கொள்ளும் அமைப்பு ஒன்றுடன் தொடர்புள்ள நபர் ஒருவர், தமிழ் சமூகத்தின் மீது புலிகள் இயக்கம் வைத்திருக்கும் ஆதிக்கத்தின் தாக்கத்தைப் பற்றி எமக்கு விபரித்தார். **கனடாவில் உண்மையான ஜனநாயகம் எமக்கு இல்லை. ஏனெனில் புலிகள் இயக்கத்திற்கு எதிராக நாம் இங்கே வாயைக்கூட திறக்க முடியாது. மக்கள் தமது வாய்களை திறக்கவே அச்சப்படுகிறார்கள். உண்மையில் மிகச் சிறுபான்மையினரே இங்கு தமது வாய்களைத் திறக்கிறார்கள். அல்லது ஏதாவது சிறு சிறு வேலைகளைச் செய்கிறார்கள்.**

இலண்டனில் புலிகள் இயக்கத்தின முன்னைய தீவிர ஆதரவாளர் எனக் கூறிக்கொண்ட ஒருவர் எம்மிடம் கூறும் போது தனிப்பட்ட முறையில் நான் புலிகள் இயக்கத்தை ஆதரித்தேன் 90 வீதமான எமது மக்கள் அவர்களை ஆதரிக்கிறார்கள். அனேகமான மக்கள் அவர்களுக்கு பின்னாலேயே நிற்கிறார்கள். நாங்கள் துப்பாக்கிகளை ஏந்தா விட்டாலும், நாங்கள் அவர்களை ஆதரிக்கின்றோம். ஆனால் பின்னர் நிலைமைகள் மாறின. சில சில குழுக்கள் குறிவைக்கப்பட்டன. யார் யார் அவர்களை கேள்வி கேட்கிறார்களோ அவர்களுக்கு நடந்ததை எம்மால் பார்க்க முடிந்தது. அவர்களின் நடவடிக்கைகள் பற்றி யாராவது கேள்வி கேட்டால், அவர்களை அவர்கள் உயிர் வாழ மாட்டார்கள். உங்களுக்கு பேச்சு சுதந்திரம் என்பது கிடையாது. எனது குடும்பம் இலங்கையில் இருந்ததால் நான் சில காலம் மிகவும் மௌனமாகவே இருந்தேன். நான் என்னை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் மட்டும் வைத்திருந்தேன். நான் என்னை வெளிக்காட்டிக்கொள்ள விரும்பவில்லை. நான் ஏதாவது செய்தால் அதற்கு நிறைய பின் விளைவுகள் ஏற்படும் என்பதை அனுபவத்தில் கண்டிருக்கிறேன். நான் எனது உயிர் பற்றியும், குடும்பத்தைப் பற்றியும் அக்கறைப்படுகிறேன். சமூகம் மிகவும் அச்சமடைந்திருக்கிறது.

பல் கலாச்சார ஸ்தாபனம் ஒன்றில் ஈடுபட்டமைக்காக ஒரு முறை பிரச்சினைக்குள்ளான ரொடன்டோவைச் சேர்ந்த ஒருவர் பின்வருமாறு கூறினார். **நான் என்ன உணர்கிறேன் என்பதை முனனர் நான் வெளிப்படையாக பேசுபவன். ஆனால் இப்போது நான் அதிக கவனமாக உள்ளேன். வெளிப்படையாக வருகின்ற நபர்கள் குறிவைக்கப்படுகிறார்கள். ஆகவே அவர்களின் பணி மிக மிக குறுகியதாக உள்ளது. நீங்கள் மனித உரிமைகளுக்காக வேலை செய்ய வேண்டும். ஆகவே நீங்கள் எதையாவது தொடங்க வேண்டும். நீங்கள் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். ஆனால் அதற்கான இடைவெளி இங்கே மிக மிக குறைவாகவே இருககிறது.**

தொடரும்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி-13

1986 மார்கழி 13 தமிழ் போராட்ட வரலாற்றில் துயரம் தோய்ந்த ஒரு நாள் மக்களின் நம்பிக்கைகளுக்குத் துரோகம் இழைத்து அரசியல் இராணுவ விடுதலை இயக்கமான ஈ.பி.ஆர்.எல்.எவ் மீது புலிகள் வஞ்சகத்தனமான தாக்குதலை தொடுத்தது இந்த தினத்திலாகும்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் மீது தாக்குதல் நடாத்துவதற்கு சில வாரங்கள் முன்னதாக புளொட் இயக்கம் அதன் அரசியல நடவடிக்கைகளை நிறுத்திவிட வேண்டும் என புலிகள் மிரட்டல் விதித்திருந்தனர்.

இதற்கு சில மாதங்கள் முன்னதாக 1986 ஏப்ரல் 29 ரெலோ இயக்கத்தை இல்லாமற் செய்யும் தாக்குதலை மேற கொண்டனர். மே 6ம் திகதி ரெலோ இயக்கத்தின் தலைவர் சிறி சபாரத்தினத்தை கோண்டாவிலில் புலிகள் இயக்கத்தின் யாழ் பிரதேச பொறுப்பாளரான கிட்டு சுட்டுக்கொன்றதும் வெற்றிக்களிப்பில் மிதந்தனர் புலிகள்.

இத்தனை நயவஞ்சக நடவடிக்கைகளையும் ஈழத்தேசிய விடுதலை முன்னணி (ஈ.என்.எல்.எவ்) என்ற இயக்கங்களின் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகித்துக் கொண்டே புலிகள் செய்து முடித்தனர்.

ரெலோ இய்க்கத்தின் மீது தாக்குதல் தொடுத்த புலிகள் அவர்கள் சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக காரணம் கூறினர். யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் வின்சர் திரையரங்குக்கு முன்பாக ரெலோ இயக்க முகாம்களிலிருந்து மீட்டெடுத்ததாக ரி.வி, டெக், வானொலிப்பெட்டிகள் போன்ற வீட்டு பாவனைப் பொருட்களை கொண்டுவந்து போட்டு பொது மக்களின் பார்வைக்கு வைத்திருந்தனர். பொதுமக்கள் அவற்றை அடையாளம் காட்டி பெற்றுச் செல்லலாம் என்று அறிவித்திருந்தனர். பொதுமக்களின் வீடுகளை புலிளும் கொள்ளையிட்டிருந்த போதும் அனைத்து பழியையும் ரெலோ இயக்கத்தின் தலையில் கட்டுவதற்கு அவர்களுக்கு இது நல்ல வாய்ப்பாக அமைந்தது.

புலிகள் இயக்கமும் ரெலோ இயக்கமும் ஐக்கிய முன்னணியில் அங்கம வகித்தாலும் இரண்டு இயக்கங்களுக்கும் இடையில் முறுகல் நிலை தொடர்ந்திருந்தது. இரு இயக்கங்களினதும் இராணுவ பிரிவினரும் அவ்வப்போது துப்பாக்கிப் பிரயோகத்திலும் ஈடுபட்டனர்.

இந்நிலையில் ரெலோ இயக்கத்தின் இராணுவ பிரிவுக்குள் எழுந்த மோதலில் அந்த இயக்கத்தின் வலுவான இராணுவ அணியாகவிருந்த



தாஸ் அணி சிதைக்கப்பட்டது. தாஸ் மற்றும் அவரது நெருங்கிய சகாக்கள் யாழ் வைத்தியசாலைக்குள் வைத்தே பொபி பிரிவினரால் கொல்லப்பட்டனர்.

இந்த படுகொலைக்கு எதிர்ப்பு தெரிவித்து தாஸ் மற்றும் சகாக்களின் சொந்த ஊரான வடமராட்சியிலிருந்து உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ரெலோ இயக்கத்தின் ஆதரவாளர்கள் நல்லூரில் உள்ள ரெலோ இயக்க காரியாலயத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர்.

இந்தப் பேரணியில் வந்த ரெலோ இயக்கத்தை ஊட்டி வளர்த்தவர்களையே ரெலோ இயக்கத்தின் தோட்டு தில்லை சுட்டுச் சரித்தார். நல்லூர் முத்திரை சந்தி பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நால்வர் பலியாகினர். இதனால் ரெலோ இயக்கம் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. வலுவிழந்து, பொதுமக்களின் வெறுப்பையும் சம்பாதித்தது. ரெலோ இயக்கத்தின் இந்த பலவீனமான நிலையை புலிகள் நன்கு பயன்படுத்தி அந்த இயக்கத்தின் மீது தாக்குதல் தொடுத்து, பலரை மிருகத்தனமாக கொன்று ரெலோ இயக்கத்தின் செயற்பாட்டை முடக்கினர்.

இதன் மூலம் சுவை கண்ட அதிகார ஆசை கொண்ட புலிகளின் தலைமை புளொட் இயக்கத்தின் உள் முரண்பாடுகளையும் நன்கு பயன்படுத்திக் கொண்டது. புளொட் இயக்கத்திற்கு எதிராக மக்கள் என்ற பேரில் சுவரொட்டிகளை ஒட்டியது. இயக்கத்தின் அரசியல் நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்வதாக பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுமாறு புளொட் இயக்கத்திற்கு பொறுப்பான மாவட்டத் தலைவர்களை மிரட்டியது. இந்தச் செய்தி யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டது. புளொட் இயக்கத்தினரிடமிருந்து ஒரு சில ஆயுதங்களை ஒப்படைக்குமாறு வலியுறுத்தி சிலரை கைது செய்தும், தடுத்து வைத்தும் துன்புறுத்தியது.

புலிகளின் இந்த நடவடிக்கைகளை பகிரங்கமாக கண்டித்ததுடன், உயிராபத்தை எதிர்நோக்கிய ரெலோ மற்றும் புளொட் இயக்கங்களின் உறுப்பினர்களுக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் அடைக்கலம் வழங்கியது. அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லவும் உதவியது. புலிகள் இதனை விரும்பாத போதும் அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. புலிகளின் தலைமை ஏக அதிகாரம் என்ற தனது நீண்ட நாள் கனவை நனவாக்க ஈ.பி.ஆர்.எல்.எவ் மட்டுமே தடையாக இருந்தது.

தமிழர் போராட்ட இயக்கங்களை அழித்தொழிக்க அந்த இயக்கங்களுக்குள் நிலவிய மோதலை வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்ட புலிகள் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்திற்குள் கருத்து ரீதியாக எழுந்திருந்த பிரச்சினைகளால அமைப்புக்குள் தோன்றியிருந்த பலவீனமான நிலையை வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டது. கருத்தளவிலான இந்தப்பிரச்சினைகள் உரியகாலத்தில தீர்க்கப்படாதது புலிகளுக்கு வாய்ப்பாகிப் போனது மட்டுமல்ல தமிழர் போராட்டம் திசைவிலகி செல்லவும் ஏதுவாயமைந்தது

ஈ.பி.ஆர்.எல்.எவ் மீது தாக்குதல் தொடுத்த புலிகள் ஏனைய இயக்கங்கள் மீது குற்றம்சாட்டியதுபோல் சமூகவிரோத செயல்களில் ஈடுபட்டதாகவோ, படுகொலைகளை புரிந்ததாகவோ குற்றம் சுமத்த முடியவில்லை.

புலிகளை தாக்க திட்டம் தீட்டியதாகவும் அதனை தெரிந்துகொண்டு தாங்கள் முந்திக்கொண்டதாகவும் புலிகள் தெரிவித்தனர்.

இது சக இயக்க போராளிகள் மீது தாக்குதல் நடாத்திய, அப்பாவிகளான புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களுக்கு வெறியூட்டவும், தமிழ் மக்களை ஏமாற்றவும் புலிகளின் தலைமை திட்டமிட்டு கூறிய பொய்யே தவிர எள்ளளவும் உண்மையில்லை.

புலிகள் தலைமையின் உள்நோக்கத்தையும், கபடத்தனத்தையும் அறியாத புலிகளின் உள்ளூர் தலைவர்களும், ஆதரவாளர்களும் எப்போதும் புலிகளின் நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பிக்கும் ஒரு கூட்டமும் ஈரோஸ இயக்கம் அரசியல் நடவடிக்கைகளை தொடர அனுமதிக்கப்பட்டிருப்பதை கூறி தமது இயக்கததின் நடவடிக்கைகளை நியாயப்படுத்தி வந்தனர். ஆனால் அவர்களின் இநத கூற்றை மறுதலித்து மிகவிரைவிலேயே புலிகளின் தலைமை அவர்களை கொண்டே ஈரோஸ் இயக்கத்தின் ஆயுதங்களை பறித்தெடுத்ததுடன் அந்த இயக்கத்தை அடையாளமற்றதாக்கியது. இன்று புலிகளை ஆதரிக்காத ஒரு சங்கம் கூட இயங்க முடியாத நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

புலிகள் நடாத்திய சக இயக்கங்கள் மீதான பாச்சல் ஒன்றும் தற்செயல் அல்ல புலிகள் தலைமையின் நீண்ட காலத் திட்டம் ஆகும். இது தமிழர் தரப்பால் உணரப்படாததும், பிற்காலத்தில் போராட்டம் சந்தித்த பல பின்னடைவுகளுக்கும், விபரீதங்களுக்கும் சீரழிவுகளுக்கும் காரணமாகும்.

மார்கழி 13ம் திகதி முன் இரவில் புலிகள் ஈ.பி.ஆர்.எல்.எவ் இராணுவ பிரிவின் முகாம்களையும், அரசியல் பிரிவு அலுவலகங்களையும் சுற்றிவளைத்து தாக்குதல் நடாத்தினர். ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்களின் வீடுகளுக்கு சென்று அவர்களை கைது செய்தனர், அவர்களது இருப்பிடங்களை துருவி, துருவி சோதனையிட்டனர். அவர்களது தாய் தந்தையரை, சகோதர சகோதரிகளை துன்புறுத்தினர். ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்களை சரணடையுமாறு கட்டளை பிறப்பித்தனர். ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்களை மறைத்து வைத்திருக்கக் கூடாது என புலிகளின் ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனங்கள் மக்களை அச்சுறுத்தின.



இந்தத் தாக்குதலின போது பாரிய மோதல்கள் எதுவும் இடம்பெறவில்லை. இது ஈ.பி.ஆர்.எல்.எவ் தம்மை தாக்க திட்டமிட்டதாக புலிகள் தெரிவித்த குற்றச்சாட்டை அர்த்தமற்றதாக்கியது. புலிகளின் தாக்குதலில் ஈ.பி.ஆர்.எல்எவ உறுப்பினர்கள் சிலர் கொலலப்பட்டனர். பலர் கைதிகள் போல கைகள் கட்டப்பட்டு புலிகளின் முகாம்களுக்குக் கொண்டு சென்று தடுத்து வைக்கப்பட்டனர். பயங்கர சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். பலர் பின்னர் சுட்டுக்கொல்லப்பட்டனர். தம்மிடம் சரணடைந்தால் மன்னிப்பு வழங்குவதாக கூறிய புலிகளின் வஞ்சக வார்த்தைகளை நம்பி பெற்றோரால், புலிகளின் முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஒப்படைக்கப்பட்டவர்களும் இதில் அடங்குவர்.



சிறிலங்கா அரசின் பெயர்பெற்ற சித்திரவதை முகாம்கள் போன்றே புலிகளின் முகாம்களிலும் அடி உதைக்கும், ஆக்கினைகளுக்கும் குறைவிருக்கவில்லை.

இன்று தமது அடாவடித்தனங்களுக்கு நியாயம் தேட தமது அடியாட்களை கொண்டு ஆர்ப்பாட்டங்களை நடாத்தி மக்கள் போராட்டங்கள் என காட்ட முனையும் புலிகள் அன்று யாருடைய தூண்டுதலும் இன்றி இயலபாகவே மக்கள் தங்கள் மன உணர்வுகளை வெளிப்படுத்தி நடாத்திய போராட்டங்களுக்கு புலிகள் எந்த மதிப்பும் தரவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ் மீது புலிகள் நடாத்திய தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊர்வலமாகச் சென்ற மக்களை துப்பாக்கிப் பிரயோகம் செய்தும், வாகனங்களால் மோதப்போவதாக அச்சுறுத்தியும் விரட்டியடித்தனர்.

புலிகள் சக விடுதலை இயக்கங்கள் மீது நடாத்திய தாக்குதல்களை அழித்தொழிப்பு நடவடிக்கைகளை நம்மவர்கள் சிலர் பேச்சிலும், எழுத்திலும் இயக்க மோதல் என்று வர்ணித்து புலிகளின் குரூரத்தை, தவறான போக்கை மூடிமறைத்துவிட்டாலும், புலிகள் இன்று வெளிப்படையாக பேசும் ஏகபிரதிநிதித்துவ ஆசையை நிறைவேற்றிக்கொள்ள மேற்கொண்ட பிரயத்தனங்களே அவை. ஆனால், புலிகளின் இந்த ஆசை நிராசையாகிப் போனது மட்டுமல்ல தமிழ் மக்களின் நியாயமான போராட்டமும் பலவீனப்பட்டு போனது. தமிழ் மக்களின் நியாயமான போராட்டம் பயங்கரவாதமாகவும், கொலைவெறியும், குரூரமும் நிறைந்ததாகவும் இகழப்பட்டும் வருகின்றது.

புலிகள் 1986 டிசம்பர் 13 இலிருந்து இன்று வரை ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தை அழித்தொழிப்பதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். புலிகளின் இந்த அராஜகங்களுக்கு முகங்கொடுத்தவாறே 20 வருடங்களை கடந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் தனது பணியை தொடர்ந்து வருகின்றது.

உன்னத தலைவர்களையும், வழி காட்டிகளையும் புலிகளின் கொலை வெறிக்கு பறிகொடுத்த போதும், பல்வேறு சதிகளுக்கும், நெருக்கடிகளுக்கும் முகங்கொடுத்த போதும, தமது அடையாளங்களை தொலைத்துவிடாமல் கட்சியின் மக்கள் நலன் சார்ந்த நிலைப்பாடுகளிலிருந்து பின்வாங்கிவிடாமல் பல ஆயிரக்கணக்கான தோழர்களும் ஆதரவாளர்களும் இன்றும் தமது இயக்கமாக ஈ.பி.ஆர்.எல்எவ் ஐ அடையாளப்படுத்திக்கொண்டிருக்கின்றனர். புலிகளின் ஏகபிரதி நிதித்து வத்துக்கு எதிராக அடிப்படை ஜனநாயக உரிமைகளையும், மனித உரிமைகளையும் நிலைநாட்ட உறுதியாகவும் விடாப்பிடியாகவும் போராடி வருகின்றனர். தமது உயிரை அர்ப்பணித்த சகதோழர்களின் இலட்சியங்களுக்கும், நம்பிக்கைகளுக்கும் துரோகம் இழைக்காமல் அவற்றை இன்னும் உயர்த்திப்பிடித்துள்ளனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்டப்பட்ட, ஈ.பி.ஆர்.எல்.எவ் இனால் கட்டியெழுப்பப்பட்ட அரசியல் அடித்தளமே அதன் சக்தி. ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தை சேர்ந்தவர்களை வகை தொகையின்றி அழிக்க முடிந்த புலிகளால் அவர்கள் கட்டியெழுப்பிய அரசியல் அடித்தளத்தை ஆட்டம்காணச் செய்ய முடியவில்லை என்பதே வரலாறு பகரும் செய்தியாகும்.

## போராட்டம்

துப்பாக்கி முனையில் வாழ்க்கை
உயிர் தப்புவதற்காக வாய்க்கு
பூட்டு
எமது தேடல்கள் எல்லாம்
அரிசி, மா, சீனி, பருப்பு
என்ற எல்லைக்குள்
துப்பாக்கிகளும்
இதையே விரும்புகின்றன -
மீறினால் தெருவிலோ,
திண்ணையிலோ
சடலமாவதே கதி

விரும்பினோம்
விடுதலைக் குரல்களை
வீட்டு வாசல்வரை அழைத்து
விருந்து வைத்து விருத்தி
செய்தோம்
விரைந்த வளர்ச்சியில் - நாம்
மகிழ்ந்தபோது - எமது
குரல்வளைகள் எமக்கும்
தெரியாது இறுக்கப்பட்டு விட்டது
தொடர்கிறது
போராட்டம்
ஏகபிரதிநிதித்துவத்திற்காக.

தி. சிறிதரன் 29ஏ, வாவிக்கரை வீதி, [illegible] C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org